
பதிவுஎண் 2041

தனிப்பிரதி விலை அணா ஒன்று.




**சந்தா விபரம்.**

| | ரூ. அ. |
|---|---|
| வருட சந்தா. .... .... .... | 3—0 |
| 6 மாத சந்தா. .... .... .... | 1-12 |
| வெளிநாடுகளுக்கு வருட சந்தா | 4—0 |

ஆதி திராவிட சங்கங்களுக்கு பாதி சந்தாவுக்கு அனுப்பப்படும்.

முன் பணமின்றி பத்திரிகை அனுப்பப் படமாட்டாது.

# [வாரப்பதிப்பு.]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

ஈரோட்டினின்று ஞாயிறு தோறும் வெளி வருவது.

**விளம்பர விகிதம்.**

| | ரூ. அ |
|---|---|
| கலம் ஒன்றுக்கு வாரம் ஒன்றுக்கு | 5—0 |
| சில்லரை விளம்பரம் அங்குலம் 1க்கு | 0—8 |


நீடித்த கால விளம்பரம் செய்வோருக்கும், பெரிய விளம்பரம் செய்வோருக்கும், பிரத்தியேக விகிதம்.

முன் பணமின்றி விளம்பரம் பிரசுரிக்கப் படமாட்டாது.

பிறப் பொக்கு மெல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய் தொழில் வேற்றுமையான்—குறள்.

ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்—குறள்.

மாலை க | குரோதன-வரு தை-மீ சு-உ (17—1—26) ஞாயிற்றுக்கிழமை | மலர் ௩எ



மகாத்மா காந்திக்கு ஜே!

வந்தேமாதரம்! அல்லாஹூ அக்பர்!!

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

தமிழ்நாடு கதர் போர்டாரால் அத்தாட்சிப்பத்திரம் பெற்ற எங்கள் டிப்போவில் பல ரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளைப் பீசுகள், ஷர்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடிச்சேலைகள், சால்வைகள், அச்சு வேஷ்டிகள் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். பிரதி ஆர்டருடன் 100க்கு 25 ரூ. வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாட்டு ஆர்டர்களுக்கு பூராத்தொகையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

ஆர். டி. முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா.)

## காங்கிரஸ் அத்தாட்சி பெற்ற சுத்த கதர்!

தமிழ் நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும் கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரி)க்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்,
ஊத்துக்குளி. (S. I. R.)

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள், ஆர்டர்கள் 100-க்கு 25 ரூபாய் வீதம் அட்வான்ஸ் அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன் பணமாகவே அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்) தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி.

ஸ்ரீமான் என். கே. சங்கரப்ப செட்டியார் கைநூல் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்குவிற்று வருகிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள்
காரியதரிசி, கத்தர் இலாகா.

விலாசம்:—
என். கே. சங்கரப்ப செட்டியார், கத்தர் ஸ்டோர்,
திருப்பூர், (தென் இந்தியா.

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்

பல ரகம்வேஸ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன்பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம் எஸ். சிதம்பரம் செட்டியார் முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்குவிற்று வருகிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள் காரியதரிசி கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார்
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா)

## திருவநந்தபுரம் "வஞ்சிகேசரி" எழுதுவதாவது.

# ஒரு ராஜீயக்கொலை.

### I

தென்னாட்டில் சுயராஜ்யக்கட்சியார் பிராமண கட்சியராயிருந்து வருவதை நாம் பலமுறை விளக்கிக் காட்டியுள்ளோம். பிராமணரல்லாதாரின் நலன்களையும் சுதந்தரங்களையும் பேணிக்கொள்ளும்பொருட்டு வைக்கம்வீரர் ஸ்ரீமான். ஈ. வெ. ராமசுவாமிநாயக்கர் பகீரதப்பிரயத்னம் செய்துவருவதையும் யாவரும் நன்கறிவார்கள். பிராமணரல்லாதாரின் க்ஷேமத்துக்கு வகுப்புவாரிப்பிரதிநிதித்துவமே ஏற்றமுறையென்றுணர்ந்த ஸ்ரீமான். நாயக்கர் அதைப்பற்றி தமிழ் நாடு காங்கரசில் ஒரு தீர்மானம் நிறைவேற்ற எண்ணி மகா நாட்டின் முதல்நாள் நடபடிக்கைகள் முடிந்தவுடன், அந்த காங்கிரஸ் பந்தலிலேயே ஒரு பிராமணரல்லாதாரின் கூட்டம்கூட்டி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவவிஷயமாக யோசனைசெய்தார். அக்கூட்டத்துக்கு ஸ்ரீமான். T. A. இராமலிங்க செட்டியார் தலைமைவகித்தார். ஸ்ரீமான்கள் C. R. ரெட்டியார், சர்க்கரைச் செட்டியார், சுரேந்திரநாத் ஆரியா, டாக்டர் வரதராஜுலு நாயுடு, ஒ. கந்தசாமிச் செட்டியார் முதலிய பல பிராமணரல்லாத தலைவர்களும் ஆஜராயிருந்தனர். கூட்டத்தைகலைப்பதற்காக ஸ்ரீநிவாஸய்யங்காரின் தொண்டர்களும் ஏராளமாகக் கூடியிருந்தார்கள். பொதுஸ்தாபனங்களிலும் சட்டசபையிலும் பிராமணரல்லாதாருக்கு முக்காற் பங்கு ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்க வேண்டுமென்ற ஸ்ரீமான். நாயக்கரவர்களின் தீர்மானத்தைப்பற்றி பலமானவாதம் நடந்தது. அநுகூலசத்துருக்களான ஸ்ரீமான் O. கந்தசாமி செட்டியார் போன்ற சிலர் தங்கள் பழுத்த ராஜீயஞானமூட்டையை அவிழ்த்துக்கொட்டாதிருக்கவுமில்லை. எதிரிகளின் தந்திரம் பலிக்காமல் ஸ்ரீமான். நாயக்கரின் தீர்மானம் நிறைவேறும் லக்ஷணம் கண்டவுடனே அய்யங்கார் தொண்டர்களான ஷாபிகூட்டத்தார், கூக்குரலிட்டும் அட்டகாசம்செய்தும் கூட்டம் நடைபெறத் தடைசெய்ததினால் அக்கூட்டம் மறுநாள் ஒத்திவைக்கப்பட்டுப் பிரிந்தது. பிராமணர் சூழ்ச்சியை உணர்ந்த பிராமணரல்லாத தலைவர்கள் மறுநாள் கூட்டத்தில் தமது தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் செய்துகொண்டிருந்தனர். அய்யங்கார் கூட்டத்தாரும் சும்மாயிருக்கவில்லை. "ஆறுகெட நாணலிடு ஊருகெட நூலையிடு" என்ற முதுமொழி பொய்க்குமா? அவர்களும் நாயக்கரின் மூக்கையறுக்கும் வகை தேடிக்கொண்டிருந்தனர்,

மறுநாளும் உதயமாயிற்று. ஒத்திவைக்கப்பட்ட முதல்நாள் கூட்டம் தொடங்கிற்று. ஸ்ரீமான். T. A. இராமலிங்கம் செட்டியார் தலைமை வகித்தார். முதல்நாள் கூட்டத்தில் ஸ்ரீமான். நாயக்கரின் தீர்மானத்தை எதிர்த்த ஒரு பாவலர் "பிராமணர் ஆண்டாலென்ன, பிராமணரல்லாதார் ஆண்டாலென்ன, இந்தியா சுயராஜ்யம் பெற்றால் போதும், பிராமணரல்லாதாரின் முன்னேறத்தில் பிராமணர்களின் நல்லெண்ணத்தை விளக்கும் பொருட்டு சட்டசபையிலும் பொது ஸ்தாபனங்களிலும் நூற்றுக்கு 9 ஸ்தானங்கள் பிராமணரல்லாதாருக்கு வழங்கவேண்டுமென்று" ஒரு திருத்தம் கொண்டுவந்தாராம். யாவரும் வியப்புறும்படி முதல்நாள் எதிர்த்தவர்களெல்லாம் அதை ஆதரிக்கவும் செய்தார்களாம். இங்ஙனே அத்திருத்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் கலைந்தது.

பின்னர் தமிழ்நாடு காங்கிரஸ் விஷய ஆலோசனைக்கமிட்டியில் அந்தப்பாவலர் தானே அந்தத் திருத்தத் தீர்மானத்தை பிரேரேபித்தாராம். உடனே அதைச்சிலர் எதிர்க்க, பலமான வாதப்பிரதிவாதம் நிகழ்ந்தது. முடிவில் தீர்மானத்தின் சாதக கட்சியார் பலத்து நிற்பதை உணர்ந்த பாவலர் திடீரென்று தமது தீர்மானத்தை வாபீஸ் வாங்கிக்கொண்டாராம். அப்பொழுதான் ஸ்ரீனிவாச சூழ்ச்சியின் மர்மம் பிராமணரல்லாதாருக்குப் புலனாயிற்று. வீரரான நாயக்கர் கொதித்தெழுந்து காங்கிரஸ் முன்னிலையில் தாமே அத்தீர்மானத்தைப் பிரேரேபிக்கப் போவதாகக் கூறினாராம். தலைவரான ஸ்ரீமான். திரு. வி. கலியாணசுந்தர முதலியாவர்கள் 25-பேர் கையெழுத்திட்டு விண்ணப்பஞ் செய்தாலன்றி அதற்கு அனுமதியளிக்கப் படாதென்று கூற, ஸ்ரீமான். நாயக்கர் 25-க்கு மேற்பட்டவர்கள் கையொப்பஞ்செய்த ஒருவிண்ணப்பம் சமர்ப்பிக்க, தீர்மானத்தைப் பிரேரேபிக்க நாயக்கரவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டது.

கடைசியாக மகாநாடு கூடியவுடன் மறு விஷயங்கள் ஆலோசிக்கப் பட்டபின் நாயக்கரவர்களின் தீர்மான விஷயத்தின் முறை வந்தது.

உடனே தலைவர் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் "காங்கிரஸே சுயராஜ்யக் கட்சியின் ராஜீய திட்டத்தை மேற்கொண்டு நடத்தவேண்டுமென்ற தீர்மானம் தோற்றுப்போய் விட்டபடியால் இந்த விஷயத்தில் காங்கிரஸ் தலையிட நியாயமில்லையெனக்" கூறினாராம்.

ஸ்ரீமான்கள். சர்க்கரை செட்டியாரும், நாயக்கரும் எவ்வளவோ வாதாடியும் நியாயங்கள் கூறியும் பிரயோஜனப்படாததினால் ஸ்ரீமான். நாயக்கரவர்கள் மனம் வெம்பி "தலைவரான முதலியாரவர்களைநோக்கி" நீங்கள் பிராமணர்களுக்குட்பட்டு மனச்சாட்சியை இழந்து இவ்வாறு நடந்துகொள்வது சரியல்ல. இந்த அக்கிராசனர் பதவி வேண்டுமானால் நீங்கள் நியாயத்தைமறந்து மனச் சாட்சியை விட்டு பிராமணர்களுக்கு அடங்கி இங்கேயேஇருங்கள், நாங்கள் வேண்டுமானால் போகிறோம்; நீங்கள் பிராமணர்களுக்கு அடங்கி நடந்துகொண்டதால் அவர்கள் உங்களைத் தங்கப்பல்லக்கிலேற்றி வைரக்கிரீடமும் சூட்டி வலம்வருவார்கள்" என்று கூறி மகாநாட்டைவிட்டு வெளியேறினார்களாம்

உடனே ஸ்ரீமான். நாயக்கருடன் ஸ்ரீமான்கள். சுரேந்திரநாத் ஆரியா, வி. சர்க்கரைசெட்டியார், தருமபுரம் ஜமீன்தார், நடேசஞ்செட்டியார், முத்தையா முதலியார், சிதம்பரம் ஜில்லா காங்கரஸ் கமிட்டித்தலைவர் இ. கே. மேனோன், எஸ். ராமநாதன், தண்டபாணிப்பிள்ளை முதலியோரும் வெளியேறினார்களாம்.

இவ்வண்ணம் புண்ணிய நகரமாகிய காஞ்சியிலே ஸ்ரீமான். திரு. வி. கலியாணசுந்தரமுதலியாரவர்கள் பார்வையில் தென்னாட்டுக் காங்கரஸ் கட்சியாரின் பிற்கால ராஜீயவாழ்வு கொலைசெய்யப்பட்டது.

இந்தக்கொலைச்சமாசாரமறிந்து நமது மனம் மிகப்புண்பட்டிருப்பதால் இதைப்பற்றி இன்னுமெழுதத் தோன்றவில்லை. அடுத்தமுறை விரிவாக எழுதுவோம்.

## வஞ்சிகேசரி எழுதுவதாவது

# ஒரு ராஜீயக் கொலை.

### II

காஞ்சிபுரம் மகாநாடு முடிவுபெற்று இரண்டு வாரங்களுக்கு மேலாய்விட்டன எனினும் நமது மனக்கொதிப்பு இன்னும் அடங்கவில்லை.

திரு. கலியாணசுந்தர முதலியாரவர்கள் தலைமை வகிக்கப்போவதாகக் கேட்டவன்றே பிராமணரல்லாதாருக்கு காஞ்சி மகா நாடு மூலம் ஒருவித நன்மையும் விளையாதென்று நாம் எண்ணியதுண்டு. தற்காலத்திய நெருக்கடியான நிலையில் ஒரு மகாநாட்டின் தலைமை வகிப்பதற்குரிய மனவுறுதி திரு. முதலியாரவர்களுக்கு இல்லையென்றும், நாம் ஒருவருஷத்திற்கு முன்னேயே அறிந்துள்ளோம். டாக்டர் நாயுடு அவர்கள் சேரமாதேவி குருகுல வாதத்தை எழுப்பியபோதும் சென்னை தருமசொத்து பரிபாலன மசோதாவை ஆதரித்த போதும் திரு. முதலியாரவர்கள் ஒருவித உறுதியான அபிப்பிராயமும் வெளியிடாது மழுப்பிக்கொண்டே இருந்தார். சென்ற சென்னை முனிசிப்பல் தேர்தலில் சுயராஜ்யக்கட்சியார் செய்த சூழ்ச்சிகளை உணர்ந்த திரு. முதலியாரவர்கள் "நவசக்தி" வாயிலாய்ப் பல முறை கண்ணீர்வடித்ததுண்டு. அத்துடனாவது அவர்களுடைய மயக்கம் தெளியுமென்று எண்ணியிருந்தோம். அந்தோ! நம் எண்ணங்களெல்லாம் பாழாயின. திரு. முதலியாரவர்கள் மீண்டெழ முடியாதவாறு அய்யங்கார் சூழ்ச்சிவலையில் விழுந்து விட்டார். தமிழர்களைப்பொறுத்தமட்டில் முதலியாரவர்களுடைய ராஜீய வாழ்வு முடிந்துவிட்டதென்றே கருதுகிறோம்.

டாக்டர் நாயுடு அவர்களை நம் தமிழுலகத்தின் ரக்ஷகரெனக் கருதியிருந்தோம். சேர்மாதேவி குருகுலப்போர் எழுந்தகாலத்து நாம் கண்ட டாக்டர் இப்பொழுது எங்குற்றார்? அறநிலையப் பாதுகாப்பு மசோதாவை ஆதரித்த ஆண்டகை இப்பொழுது யாண்டுள்ளார்? காஞ்சியில் தமிழர் வாழ்

# கல்வியின் ரகசியம்.

இரண்டு வைதீகப்பிராமணர் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளுகிறார்கள்.

கணபதி சாஸ்திரிகள்:- என்ன சுவாமிகளே சவுக்கியம்தானே?

லக்ஷிமண சாஸ்திரிகள்:- ஏதோ தங்கள் ஆசீர்வாதத்தால் சவுக்கியம்தான்.

க-சா:-குழந்தைகள் எல்லாம் க்ஷேமந்தானே?

ல-சா:-அவைகளும் சிவபெருமான் அந்த, ரங்கநாதனுடைய கடாக்ஷத்தால் க்ஷேமமாகவே இருக்கின்றார்கள்.

க-சா:- குழந்தைகளெல்லாம் படித்திருக்கிறதா?

ல-சா:-படித்திருக்கின்றனகள். ஆனால் அதற்காக நான் பட்டசிரமம் இருக்கின்றதே அது சாக்ஷாத் பகவானுக்குத்தான் தெரியும்;

க-சா:- என்ன அவ்வளவு கஷ்டம்?

ல-சா:– அதையேன் கேட்கிறீர்; ஒன்றுவது என்னுடைய குமாரர்கள் பிராமணபிந்து என்றே சொல்லமுடியாது. சூத்திரபிந்து என்றுதான் சொல்லவேண்டும், படிப்பு விஷயத்தில் ஒன்றும் சரியான கவலை எடுத்துக் கொள்ளவேயில்லை. எந்நேரம் பார்த்தாலும் சூத்திரப் பையன்களோடே சேர்ந்து கொள்ளுகிறது; சிகரெட்டு குடிக்கிறது; சீமைச்சாராயம் குடிக்கிறது; டிராமா ஆடப்போய் விடுகிறது; நாளெல்லாம் இப்படியேதான்; அவர்களின் ஒவ்வொரு பரீக்ஷைக்கும் நான் பட்டபாடு வெளியில் சொல்லமுடியாது.

க-சா:-அதென்ன விசேஷம்; பையன்கள் பரீக்ஷைக்குத் தாங்கள் என்ன பாடு படுகிறது?

ல-சா:- அதையேன் கேட்கிறீர்கள்? பரீக்ஷைவந்து விட்டால் எனக்கு சாப்பிட நேரமில்லை, ஒன்று,இரண்டிற்குப்போகக்கூட நேரமிருப்பதில்லை.

ல-சா:—என்ன அவ்வளவு கஷ்டம்?

க-சா:—கஷ்டமா சொல்லுகிறேன் கேளுங்கள். முதலாவது,

பரீக்ஷை காலம் வந்து விட்டால் பரீக்ஷை கேள்விகளை தெரிந்து வந்து பையன்களுக்கு சொல்லுவதற்கு அலையும் அலைச்சல் இவ்வளவு அவ்வளவு என்றே சொல்லமுடியாது.ஏதோ நம்மிடவாள் யூனிவர்சிட்டிமுதலானதுகளில் பிரதானஸ்தானத்தில் இருப்பதினால் அவர்கள் தயவுக்கு கட்டுப்பட்டு,பரீக்ஷை கேள்வி எழுதுகிறவர்கள், நம்ம பரிதாபத்தையும் பார்த்து ஜாடைமாடையாய் இரண்டு ஒன்று சொல்லி விடுவார்கள்.அதில் ஏதாவது கொஞ்சம் கஷ்டமிருக்குமானால், அச்சாபீசுக்காரர்களுக்கு தக்க சிபார்சு பிடித்து அங்கு ஏதாவது ஒன்று இரண்டு பரீக்ஷை காகிதம் பெற்றுக்கொள்ளுகிறது. அதிலும் சரியாய் கிடைக்காவிட்டால், பரீக்ஷை ஆன பிறகு பரீக்ஷைபேப்பர்களை திருத்தி மார்க்கு போடுகிறார்களே, அவர்களிடம் போய் கெஞ்சிக் கூத்தாடி மார்க்கு அதிகம்போடச் செய்கிறது. இப்படியெல்லாம் கஷ்டப்பட்டு நாலு பிள்ளைகளையும் பி.ஏ. பாசாக்கிவைத்தேன்.

க-சா:—இதெல்லாம் சுலபமாக முடிகிறதா?

ல-சா:-ஐயையோ,சுலபமா?அது இன்னமும் வெட்கக்கேடு.எத்தனை பெரியமனுஷான் சிபார்சு வேண்டியிருக்கிறது. ஒருசமயத்தில் வைஸ்சான்சிலர் சிபார்சு, மற்றொரு சமயத்தில் ஐகோர்ட் ஜட்ஜி சிபார்சு, மற்றொரு சமயம் எக்ஸிகியூடிவ் கவுன்சிலர் சிபார்சு, மற்றொரு சமயம் அட்வொகெட் ஜனரல் சிபார்சு,பலசமயம் எஜுகேஷனல் டிபார்ட்டுமெண்டில் இருக்கும் இன்ஸ்பெக்டர், அசிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர் முதலானவர்கள் சிபார்சு, பிரசிடென்சி மேஜிஸ்ட்ரேட் சிபார்சுகூட ஒருதடவை வாங்க நேர்ந்தது.

க-சா:—இவர்கள் எல்லாம் இதற்கு சம்மதிப்பார்களா?

ல-சா:—இவர்களெல்லாம் பிராமணர்களாயிருக்கிறவர்களிடம்தானே நான் போவேன். சூத்ரனிடம் அவாள்யாராவது நேரில்கூப்பிட்டு சொன்னால் ஒழிய, நான் போகவே மாட்டேனே. சிலசமயத்தில் நம் வீட்டில் ஆம்பிடையாளை அனுப்புவது.

க-சா:—அவர்கள் போய் என்ன செய்வார்கள்?

ல-சா:-என்னசெய்வதென்று கேட்கிறீர்கள்.பெரிய அதிகாரிகள் வீட்டுபெண்களிடம் போய் அழுகிறது, அவாள் மனமிரங்கி தங்கள் புருஷனுக்கு சிபார்சு செய்கிறது. இப்படித்தான் இந்தக்காலத்தில், பின்னே வேறுஎன்னசெய்வது?ஒருதடவை பாருங்கோ-கேட்க வேடிக்கையாயிருக்கும்; நம்ம இரண்டாவதுபையன்பிசிக்ஸ் என்கிற பாடம்எடுத்துக்கொண்டான்;பிசிக்ஸ் என்கிறவார்த்தை அவன் வாயிலும் நுழையாது,எழுத்து தப்பில்லாமல் எழுதவும் தெரியாது. சூத்திர சாவகாசம்தானே. பிராமண வாக்கு எப்படி வலுக்கும். இப்படி இருக்க பரீக்ஷைவந்துவிட்டது;என்னுடைய தைரியத்தில் பையன் புஸ்தகம்கூட வாங்கவில்லை. புஸ்தகத்திற்கு கொடுத்த பணத்தை சிகரெட்டு குடிக்கவும், மில்டரி ஓட்டலுக்குப் போகவும், செலவு பண்ணிவிடுகிறது. நான் என்ன செய்கிறது,நம்ம அய்யர்வாள் காலில்போய் விழுந்தேன்; அவர் சம்சாரம் ரொம்பவும் நல்லவாள். சாஸ்த்திரிகளே,சாஸ்த்திரிகளே இப்படிப்பண்ணலாமா எழுந்திருங்கோ என்று சொல்லி, உங்களுக்கு என்னகுறை என்று கேட்டார்கள், உண்மையைச் சொன்னேன். உடனே ஒரு சீட்டு எழுதி ஒருவரைத்தருவித்தார், அவர் வந்ததும் இதைச்சொன்னார்; உடனே அவர் என்னை-சாயந்திரம் ஐந்து மணிக்கு தன் வீட்டுக்கு வரச்சொன்னார்; அந்தப்படியே நான் அங்கே போனேன்; ஓர் காகிதம் என்னிடம் கொடுத்து இதைப்பார்த்து எழுதிக்கொண்டு,திரும்பக் கொண்டுவந்து கொடுத்துவிடும்படி சொன்னார். அப்படியேசெய்தேன்; அப்படியிருந்தும் நம்ம பையன் பரீக்ஷைக்குப் போய்வந்து தான் பரீக்ஷையில் சரியாய் எழுதவில்லை என்று சொல்லிவிட்டான். பின்னே அவர் வீட்டுக்குப் போய் அழுதேன். அவருக்கும் எனக்கும் நடந்த சம்பாஷணையைச் சொல்கிறேன் கேளுங்கள்.

அவர்:—என்னைய்யா பரீக்ஷைபேப்பர் கொடுத்துக்கூட உங்கள் பிள்ளை எழுத முடியாவிட்டால் என்ன செய்கிறது.

நான்:—எப்படியாவது தாங்கள்தான் காப்பாற்றவேண்டும்.

அவர்:—இப்படியே எவ்வளவு பேருக்கு நான்செய்வது.

நான்:—அப்படியா இன்னம் யாருக்குச்செய்கிறீர்கள்.

அவர்:—பிராமணப்பையன்கள் எல்லோருக்கும்தான் ஏறக்குறைய செய்துகொண்டுவருகிறேன்.

நான்:—சூத்திரப் பிள்ளைகளுக்கும் கூட செய்வதுண்டா?

அவர்:—அவர்களுக்கும் கூடத்தான் செய்துவருகிறேன்;ஆனால் மார்க்கு போடுவதில்லை;சுளித்துகொண்டு வருகிறேன்.

நான்:—அவர்களும் தங்களிடம் வருகிறார்களா.

அவர்.—என்னிடம் வருவதில்லை. நானாகவே அவர்களுக்கு சுளித்துவிடுவது; ஏனென்றால் வருஷத்தில் 100-க்கு இத்தனை பிள்ளைகள்தான் பாசாக்கவேண்டும்; என்கிற ஒரு கணக்கு எங்களுக்குள் உண்டு;அது எங்கள் கமிட்டியில் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளுவோம்; அந்த கணக்குக்கு பிராமணப் பிள்ளைகளையே சரிப்படுத்திவிடுவேன்; பேருக்கு சில சூத்திரப்பிள்ளைகளையும் போடுவேன்; ஆனால் அவன்கள் நம்ம பிராமணப் பிள்ளைகளையெல்லாம் எடுத்து விழுங்கும்படியான மணிப்பயல்களாயிருப்பார்கள். வெகுபிள்ளைகள் சூத்திரப் பிள்ளைகள் சரியாய் எழுதியிருந்தால்கூட நான் சுளித்து விடுவேன். நம்மை ஏய்ப்பதற்காகவே அந்தப்பிள்ளைகள் ஜாதி கண்டுபிடிக்க முடியாதபடி மீனாக்ஷிசுந்தரம், வேணுகோபாலன், நஞ்சப்பன் என்று எழுதுவார்கள். அப்படி ஏதோ ஜாதி தெரியக்கூடாத இரண்டொரு சூத்திரப் பிள்ளைகள் தவிர, மற்றதுகளுக்கு நான் சுலபத்தில் மார்க்குப் போடமாட்டேன். அப்படி இருந்தாலும் வரவர அதுகள் படிக்க ஆரம்பித்துவிட்டதுகள்- கீழ்பள்ளிக்கூடங்களிலும் உபாத்தியாயர்மார்களுக்கும் தகுந்தபடி சொல்லி வைத்திருக்கிறோம்; கூடுமானவரையில் சூத்திரப் பிள்ளைகளுக்கு மார்க்குப் போடாமலும், கண்டிப்பாய் மேல் வகுப்புக்கு அனுப்பாமலும், இருக்கும்படி செய்திருக்கிறது. சூத்திரப் பணக்காரர்கள் வீட்டுப்பிள்ளைகள் வந்தால் கண்

பாய் அதுகளைச் சுளித்தேவிடச் சொல்லுகிறோம். அவர்கள் தகப்பன்மாரைக் கூப்பிட்டும் உங்கள் பிள்ளை படிக்காது; அதற்குப் படிப்பும்வராது; வேறுவேலையில்போடு என்று சொல்லிவிடும்படியும் செய்கிறோம். அதிலும், எஸ்.எஸ்.எல்.சி.)பாசாகவே நாங்கள் விடுவதில்லை. அதிலும், தப்பித்தவறி பாசாகி எப். ஏ. வகுப்புக்கு வந்துவிட்டாலோ கண்டிப்பாய் 0 சுளிதான் போடுவது.

நான்:— அதேன் பணக்காரர்கள் வீட்டுப் பிள்ளைகள் படித்தாலென்ன?

அவர்:— ஐயோ அது நமக்கு பெரிய ஆபத்து அல்லவா? பணமும் படிப்பும் இரண்டும் அவர்களுக்கு ஏற்பட்டுப் போனால், நம் கதி அதோகதிதான். எப்படியாவது உத்தியோகம் சம்பாதித்துக் கொள்வார்கள்; முன்னுக்கு வந்துவிடுவார்கள்; பிறகு நமக்கு அது பல வழிகளிலும் கஷ்டமாய்த் தானிருக்கும். பணக்காரர் வீட்டுப்பிள்ளைகள் அரைப்படிப்போடிருந்தால்தான் நமது பிழைப்புக்கு அனுகூலமுண்டு. அதுகள் படிக்காமலும் இருக்கக்கூடாது; 6-வது பாரம் வரைக்கும் படிக்கவிடவேண்டும்; அப்படி இருந்தால்தான் பள்ளிக்கூடங்களும் நடைபெறும், அவர்கள் சம்பளத்தில் நம்ம பிள்ளைகளும் படிக்கலாம்; அந்தப் பிள்ளைகளும் குடும்பங்களைக் கவனியாமல் வீணாய்ப் பணத்தைச் செலவுசெய்யும் வழியும் கற்றுக்கொள்ள சுலபமாகும்; நம்மவர்களில் படிக்காதபற்ற மற்ற பிள்ளைகளும் அவர்களுக்கு பிரைவேட் செக்ரெட்டரியாய் இருந்துகொண்டு காலங் கழிக்கமுடியும். இந்தப்படிப்பு என்கிறதந்திரம் ஒன்றினால்தானே பிராமணர்களாகிய நாம் பிழைக்கிறோம். அதுவும் இல்லாவிட்டால், நாம் பழைய ஆரியர்களாகத்தான் வாழவேண்டும்.

நான்:— அப்படியா படிப்பில் இவ்வளவு இரகசியம் இருப்பது எனக்கு தெரியவே தெரியாது. பகவான் உங்களை சிரஞ்சீவியாய் வைத்திருக்க வேண்டும்; நான் போய்வருகிறேன்.

அவர்:— நமஸ்காரம்.

நான்:— ஆசீர்வாதம் சொல்லிவிட்டு வந்துவிட்டேன். இவ்வளவும் பண்ணின பிறகு, நம்மபையன் சக்கிண்ட் கிளாசில் பாசானான்; மற்ற பிள்ளைகளைப்பற்றி நான் எவ்வளவு கஷ்டப் பட்டிருப்பேன்; தாங்களே யோசித்துப் பாருங்கள்.

க-சா:—அப்படியா சரி. நம்ம மகள் வயிற்றுப்பேரன் இரண்டுவருஷமாய் எப். ஏ. வகுப்பில் தவறிவிட்டான். இவ்வருஷம் அவனுக்கு ஏதாவது செய்யமுடியுமா?

ல-சா:—முன்போலேஇருந்தால் நிமிஷத்தில் செய்துவிடமுடியும்; இப்பொழுது வரவர சூத்திரன்கள் ஆதிக்கமாய்போய்விட்டது; பிராமண அதிகாரிகள் கொஞ்சம் பயப்படுகிறார்கள். ஆனாலும் முடியாதகாரியமல்ல; அவன் பெயர் என்ன.?

க-சா:—கருப்பசாமி

ல-சா:—சரி-சரி- அதுதான் அவன் இரண்டு வருஷம் தவறிப்போய்விட்டான். பஞ்சாபகேசன் என்றாவது, பிராணதார்த்திரி என்றாவது, சந்தேகிக்க முடியாதபடி பிராமணப்பெயர் வையுங்கள். கண்டிப்பாய் பாசாக்கிவைத்து விடுகிறேன்.

க-சா:—சரி உங்கள் பிள்ளைகளெல்லாம் என்ன செய்கிறார்கள்?

ல-சா:—பெரியவாள் ஆசீர்வாதத்தால் அதில் ஒன்றும் குறைவில்லை. ஆளுக்கொருவேலையில்தான் இருக்கிறார்கள். பெரியவன் சால்ட்டு சர்க்கிள் இன்ஸ்பெக்டராயிருக்கிறான், அடுத்தவன் போலீசு இனிஸ்பெக்டராயிருக்கிறான், மூன்றாவதவன் காங்கிரசின் பேரால் க்ஷேமமாய் இருக்கிறான்; நாலாவதவன் வக்கீலாயிருக்கிறான்.

க-சா:—அப்படியா ஷெ உத்தியோகங்களில் அவர்கள் எல்லாம் எப்படி விளங்குகிறார்கள், அல்லாமலும் காங்கிரசின் பேரால் க்ஷேமமாயிருக்கிறான் என்று சொன்னீர்களே அது என்ன?

ல-சா:— கேட்பதற்கு அது மிகவும் வேடிக்கையாய்த்தான் இருக்கும், சந்திவேளையாயிற்று. அனுஷ்டானம் செய்துவிட்டு வந்து சொல்லுகிறேன்.

க-சா:— நானும் போய் அனுஷ்டானம் செய்துவிட்டு வருகிறேன். இந்த லௌகிகங்கள் எல்லாம் எனக்கு கேட்க ஆசையாயிருக்கிறது.

ல-சா:— அப்படியானால் இன்னம் எவ்வளவோ யிருக்கிறது; தாராளமாய்ச் சொல்லுகிறேன்.

க-சா:— உத்திரவு கொடுக்கவேண்டும்; நிலாவெளிச்சம்தானே, சாப்பிட்டுவிட்டுவருகிறேன்; பேசிக்கொண்டிருக்கலாம்; நமஸ்காரம் போய்வருகிறேன்.

ல-சா:— சரி அப்படியே அவசியம் வாருங்கள்.

[தொடரும்]

---

## கான்பூரும் அமராவதியும்

### இரணியனும்—பிரகலாதனும்


கடந்த ஆண்டின் இறுதியில் கூடிக்கலைந்த மகாநாடுகள் பலவற்றில் மேற்குறித்த இரண்டைப்பற்றியே இக்கட்டுரை எழுத முன்வந்தேன். தேசிய காங்கிரசு என்று செல்லிக்கொண்ட சுயராஜ்யக்கட்சி மகாநாடு, கான்பூரில் செய்த தீர்மானங்களுக்கும், பிராமணரல்லாதார் கட்சி, காங்கிரசு என்று அமராவதியில் கூடிய மகாநாட்டின் தீர்மானங்களுக்கும், நடைமுறைகளுக்கும், தேச வகுப்பு சம்பந்தத்திற்குமுள்ள விஷயங்களை ஆராயப்புகுவதே நம்முடைய நோக்கமாயிருக்கவேண்டும். இரண்டு மகாநாடுகளிலும், தீண்டாமை, தென்ஆப்பிரிக்காவிஷயம், இந்திய சுயராஜ்யம், முதலியவைகளில் அக்கரையும், அநுதாபமும் இருக்கிறது. இரண்டுமகாநாடுகளிலும் தேசாபிமானம் பொலிந்து தானிருக்கிறது. வித்தியாசமெல்லாம் முட்டுக்கட்டை, சட்டமறுப்பு என்கிற செப்படி வித்தையில் தான். சுயராஜ்யக்கட்சிக்காரர்கள் முட்டுக்கட்டை போட்டு கவர்மெண்டை நடைபெறாமல் செய்து, தங்கள் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்கிறார்கள். பிராமணரல்லாத கக்ஷியார் சீர்திருத்தத்தை நடத்த பரஸ்பர ஒத்துழைப்புடன் அதிலுள்ள குறைகளை நிவர்த்தித்து முன்னேற வேண்டுமென்கிறார்கள். அதோடு தங்கள் வகுப்பு நலத்தையும் கோருகிறார்கள். இதுகளில் எதில் உண்மையும் உசிதமும் இருக்கிறதென்பதை நாம் யோசிக்கவேண்டும். இச்சுயராஜ்யக் கட்சி இதுவரை போட்ட முட்டுக்கட்டையால் அடைந்த பலன் என்ன? முட்டிமன் கமிட்டி தீர்மானம் தோற்றபின் ராஜிநாமாகொடுப்பதாய்ஒரு ஆர்ப்பாட்டம் செய்தார்களே; அதுஎன்னஆயிற்று? தேசபக்தர்களாகிய வங்காளத்தலைவர்கள் விசாரணையின்றி சிறையில் கிடக்கிறார்களே; அதற்காக இவர்கள் என்னசெய்தார்கள், ஏன் இவர்கள் முட்டுக்கட்டைபோட்டு விசாரணைக்கு கொண்டுவரவில்லை. அல்லது விடுவிக்கவில்லை; முடியாவிட்டால் ஏன் ராஜிநாமா செய்யவில்லை. இதுகள் நடந்த பிறகு தானே சம்பள உத்தியோகம் பெத்துக்கொண்டது. பணம் என்றால் வாயைத் திறப்பதா? சட்டமறுப்பு, சட்டமறுப்பு என்று சொல்கிறார்களே. இவ்வார்த்தையை எப்படி சங்கோசமில்லாமல் வெளியில்சொல்லலாம்! முப்பதாயிரம்பேர் சிறைசென்று கலாசாலைகளெல்லாம், மூடியிருந்தகாலத்தில் சட்டமறுப்புச் செய்ய முடியாமல், உத்தியோகத்திற்கும், பட்டம் பதவிகளுக்கும் ஆசைப்பட்டு சட்டசபைக்குப்போக சுயராஜ்யக்கட்சியென்று ஒருகட்சி ஏற்படுத்திக்கொண்டு மகாத்மாகாந்தியடிகளின், ஒத்துழையா இயக்கத்தை இருக்க இடமில்லாமல் செய்தது மல்லாமல், மகாத்மாவையும் சபர்மதியில் உட்கார வைத்துவிட்ட இக்கட்சியார் சட்டமறுப்பு என்று சொன்னால் ஜனங்கள் சிரிக்கமாட்டார்களா வென்று இவர்கள் ஏன் நினைப்பதில்லை? ஆசை வெட்கமறியாது போலும். 1926-ம் வருஷம் பொதுத்தேர்தல் வருகிறதென்று வாயில் ஜலம் ஊற்றெடுக்க அன்னியநாட்டு உடையுடன் இக்கட்சியில் சேர்ந்து ராஜீய வேலைகளில் ஈடுபடும் போதுகூட கத்தர் உடுத்த ஆக்ஷேபிக்கிற இவர்கள் 33 கோடி மக்களின் க்ஷேமங்களுக்காகப் பாடுபடுகிறோம் என்று சொன்னால், இது பொது ஜனங்களைச் சுத்த முட்டாள்களென்று நினைப்பதல்லாது வேறு என்ன? முதலாவது, இக்கட்சிக்கு சட்டசபை ஓட்டு வாங்குவது தவிர வேறுமுண்டோ? கான்பூரில் எத்தனை தீர்மானங்கள், எத்தனை திருத்தங்கள். இவர்கள் நிர்மாண வேலைத்திட்டம், பிரசங்க மேடை நிர்மாணிப்பதுதான் போலும். இக்கட்சியிலிருந்து பிரிந்து போன ஸ்ரீமான். கெல்கார் கோஷ்டியாரின் கொள்கை எவ்வளவோ யோக்கியமானது. எப்படியெனில் ஒன்று, ஒத்துழையாமை, அல்லது, பரஸ்பர ஒத்துழைப்பு. இது ஒருவாறு கிரமமாகும், உண்மையுமாகும், இதற்குத்தான்

அதில் வழியுண்டு. இரண்டும் வேண்டாமென்றால் மகாத்மா மாதிரி ஒய்வு எடுப்பதுதான். அதுவுமன்றி, எதற்கும்முட்டுக்கட்டையென்று வாய்ப்பறையடிப்பது ஜனங்களை ஏமாற்றுவதாகும். எனது அன்பார்ந்த ஓட்டர்களே! மிகவும் எச்சரிக்கையாயிருங்கள். உங்களிடம் வாக்குப் பெற்றுக்கொண்ட ஒப்பந்தத்திற்கு மாறாக, சுயராஜ்யக் கக்ஷியின் மாபெருந்தலைவர்களே, சட்ட சபைத் தலைமைப் பதவியும், ராணுவக் கமிட்டி அங்கத்தினர் பதவியும், நிர்வாக சபை மெம்பர் பதவியும் இப்போது பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அக்கக்ஷியார்களில் அநேகர் கண்டித்தும், ராஜீனாமாக் கொடுக்கும்படி வற்புறுத்தியும் சட்டை செய்யாமல் செவிடன் காதிலூதிய சங்குபோல் போய்விட்டது. இவர்கள் யோக்கியதையே இப்படி இருக்க, இனி 1926-ம் வருஷம் தேர்தல் வேட்டைக்கு வந்து புதிதாய் சேர்ந்திருக்கிற தேசபக்தர்களா உங்களுக்கு கொடுக்கிற வாக்கை நிறைவேற்றப் போகிறார்கள்? இந்தக் கஷ்டத்தைப் பார்க்கச் சகிக்காமல் காங்கிரசை விட்டே மகாத்மா போய்விட்டார். இவர்களுக்குக் கெடுதல் செய்யமாட்டேன் என்கிறார். செய்யவுமாட்டார்; அவரைக் கொலை செய்ய ஒரு மனிதன் வந்தால்கூட, அவனுக்குக் கெடுதி செய்ய நம் மகாத்மா ஒருப்படார். இவர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஏன் கெடுதி செய்யப் போகிறார்.? "அடுத்த டிசம்பர் வரை" ஒய்வெடுத்துக்கொண்டார். இது ஒத்துழையாமையை தள்ளி வைத்தது போல்தான்; 7 நாள் உண்ணாவிரதமிருந்ததற்காக, என்று சொல்லப்படுகிறது. அப்படியானால் 21நாள் உண்ணாவிரதத்திற்குமூன்று வருஷமல்லவோ ஒய்வெடுக்கவேண்டும். அப்போது ஏன் ஒரு மாதம்கூட ஒய்வெடுக்கவில்லை. இதிலிருக்கிற மர்மத்தை வாசகர்களே யூகித்துக் கொள்ளலாம். சுயராஜ்யக் கக்ஷியின் பலனாக விலகியிருக்கிறார். இதன் பலாபலன் ஒரு வருஷத்தில் தெரியவரும். இச்சந்தர்ப்பத்தில் கயாக் காங்கிரசில் சின்னக் காந்தியென்று கொண்டாடப் பெற்ற ஸ்ரீமான். ச. ராஜகோபாலாச்சார் வெளிவந்திருக்கிறார். தமிழ் நாட்டில் ஆச்சாரியாரைப் பற்றி அறியாதார் யாருமில்லை. டாக்டர் வரதராஜுலு நாயுடு குருகுலப் போராட்டம் ஆரம்பித்த காலத்தில், தம்முடைய பதவியை ராஜீனாமாக் கொடுத்து விட்டு புதுப்பாளையம் ஆசிரமத்தில், கத்தர் தொண்டில் இறங்கியிருந்தவர், இப்போது ஸ்ரீமான். சீனிவாசய்யங்கார் தலைவராக வந்த பின்னிட்டு சுயரூபத்துடன் வந்திருக்கிறார்; ஆச்சாரியாரை ஒன்று கேட்கலாம். ஐயா தாங்கள் கயாவில் செய்த திருவிளையாடலை மறந்துவிட்டீர்களா? தாங்கள் ஜாதி மதபேதமின்றி, மது விலக்கைப் பொருத்தமட்டில் சட்ட சபைக்கு ஓட்டு கொடுக்கும்படி சொல்ல வந்தீர்களே, காந்தியடிகள், மதுவிலக்கு தீண்டாமை இதுகளைப் பொருத்தமட்டிலும் சட்ட சபைக்கும் கோர்ட்டு முதலியவைகளுக்கும் போகலாம் என்று ஒத்துழையாமையில் திருத்தம் செய்திருக்கிறாரா? அல்லது. மதுவிலக்குச் செய்வோம் என்று சுயராஜ்யக் கக்ஷியார் சொன்னால்தான் உங்கள் இனத்தாரை, பாமர ஜனங்கள் தேர்ந்தெடுப்பார்கள், அப்புறம் சொன்ன வார்த்தையை நிறைவேறாவிட்டாலும் பாதகமில்லை, மெஜாரிட்டியாகிவிட்ட பிறகு, தேவஸ்தானச் சட்டம் முதலிய தர்ம சட்டங்களில் கை வைக்கலாம் என்ற எண்ணமா? சுயராஜ்யக் கக்ஷியார், சொன்னபடி நடக்காதார்களானபடியால், எதை வேண்டுமானாலும் சொல்லி ஓட்டுப் பெற்றுவிடலாம், பின்னால் அதன்படி செய்யவேண்டுமென்ற அவசியமில்லை. ஆனால் ஜஸ்டிஸ் முதலிய கக்ஷியார்கள் முடியாத விஷயத்தைப் பொய்யாக ஓட்டர்களுக்குச் சொல்லமாட்டார்கள் என்று மது விலக்கை உள்ளே நுழைத்தீர்களா? தான் கெட்டதுமல்லாமல் சந்திர புஷ்கரணியும் கெடுத்ததென்று சொல்வதுபோலத் தாங்கள், காந்தியடிகளின் எண்ணத்திற்கு மாறாக வந்ததுமல்லாமல், தங்களைப்போலவே அடிகளின் பேரைச் சொல்லிக்கொண்டிருந்த திருவாளர். திரு.வி. கல்யாணசுந்தர முதலியாரையும், சதுருக்கு இழுத்து விட்டுவிட்டீர்கள். வெகு நாளாய் தங்களுக்கு அவர் மேல் இருந்த பழியை தீர்த்துக்கொண்டீர்கள். அவர் விஷயம் மிகவும் பரிதபிக்கக்கூடியதாய்விட்டது. அவர் காஞ்சீபுரம் மகா நாட்டின் தலைமையை வகிக்காமலிருந்தால் கூட இவ்வளவு கெட்ட பேர் வாங்கியிருக்கமாட்டார். அவர் நவசக்தியில் எழுதுவது வியப்பாகவேயிருக்கிறது. எழுதுவது முதலியாரா அய்யரா என்பதே சந்தேகமாயிருக்கிறது. பிராமணரல்லாதாரில் மிகச் சிலர் கொண்டது ஜஸ்டிஸ் கக்ஷியென்கிறார். அமராவதிக் காங்கிரஸில் பதினைந்தாயிரம்பேர்கள் கூடியிருப்பது. முதலியார் அவர்களுக்கு மிகச் சிலர் போல்தான் தோன்றுமோ, என்னமோ தெரியவில்லை. சில நாட்களுக்கு முன் சுயராஜ்யக்கட்சி விஷயமாய் முதலியாருக்கு இருந்த கசப்பு இவ்வளவு சீக்கிரத்தில் அமிர்தமாக மாறிவிட்டது. அதற்குக்காரணம் வெகு ரகசியமாயிருக்கிறது. வெளிக்குமாத்திரம் சுயராஜ்யக் கட்சியார் சட்டமறுப்பை ஆதரிப்பது என்று மயக்குகிறார். இந்த நிலைமையை முதலியாரிடம் எதிர்பார்த்ததுதான். ஐயோ முதலியாரே பேஷ்! பேஷ்! நன்றாயிருக்கிறது. தமிழ்நாட்டுத் தமிழரிடம் நல்ல பெயரெடுத்துவிட்டீர்கள்! அருமை வாக்காளர்களே, ஓட்டர்களே; காந்தியடிகளின் சிஷ்யர் என்று சொல்லிக்கொண்டு இதுவரை, இருந்த பெரியோர்களின் சாயம் வெளுத்துப்போய்விட்டது. இவர்கள் இனிபிரசாரம் செய்யப்புறப்படப் போகிறார்களாம். இந்தப் பகல்வேஷத்திற்கு நீங்கள் இடங்கொடுக்காதீர்கள். இதுவரை உங்களுக்கும் உங்கள் முன்னேற்றத்திற்கும் ஊழியஞ்செய்த செய்யக்கூடிய கட்சி எதுவாயிருந்தாலும் அக்கட்சிக்கு நீங்கள் ஓட்டுக் கொடுக்கவேண்டும். சமீபத்தில் யாஜீ ஐகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீமான். டி. வி. சேஷகிரி ஐயர் சொல்லியிருப்பது போல சுயராஜ்யக் கட்சியின் மாயவலையில் சிக்காதீர்கள், அமராவதியில் கூடிய மகாநாட்டின் நடவடிக்கைகளை நீங்கள் நன்றாக ஆராய்ச்சி செய்யுங்கள். அம்மகா நாட்டின் தலைவர்கள் பிரசங்கத்தையும் அதின் தீர்மானங்களின் உண்மையையும் கவனியுங்கள். நமது இயக்கத்திற்கே கேடுவிளைக்கிற ஆள்களின்—பத்திரிகைகளின்— கூச்சலைப் பொருள் படுத்தாதீர்கள். உண்மையில் நெஞ்சில் கைவைத்து யோசியுங்கள். தமிழர்களுக்கு சுயமரியாதை தேடிக்கொடுத்து முன்னுக்குக்கொண்டுவந்தது எக்கக்ஷி? படிப்பு, சுகாதாரம், சுதேசவைத்திய முறை, தாழ்த்தப்பட்டவர் முன்னேற்றம், உத்தியோகம், இத்தியாதி அனுகூலங்கள், பிராமணரல்லாதாருக்கு உண்டானது எக்கக்ஷியால்.?- தமிழர்களுடைய பாத்யத்தை நிலைநிறுத்துவதற்கல்லவோ பல ஆயிரம் மைல் கப்பல் யாத்திரை செய்து உயிரை நீத்த பெரியார் டாக்டர் நாயர் அவர்களால் கண்ட பிராமணரல்லாதார் கட்சியாலல்லவா? காலஞ்சென்ற அரிய தலைவர் சர். தியாகராயர் தமிழர்களுக்காக பட்ட கஷ்டங்கள் கொஞ்சமா? அவருடைய சேவை யல்லவா, நம்மையெல்லாம் மனிதனாக்கியது. இந்தநன்றியைமட்டும் மறவாதீர்கள். ஆகையால், பிராமணரல்லாத சகோதரர்களே, நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் நலம் நாடும் கக்ஷிக்காரர்களுக்கே ஓட் செய்து, மானத்தையும், தேசத்தையும் காப்பாற்றுங்கள். இன்றையதினம் உங்கள் காலுக்கு முத்தம் கொடுக்கும் பிராமணர்கள் தங்கள் சட்ட சபை வேலை ஆகிவிட்டால், உங்களை சட்டைகூட செய்யமாட்டார்கள். தேசத்துக்காக— 5 வருஷம் ஜெயிலுக்குப்போன ஸ்ரீமான் ஆரியாவையும், 3 தரம் ஜெயிலுக்குப் போனதோடு ஆச்சாரியார் பின்னால் கவி பாடிக்கொண்டு திரிந்த ஸ்ரீமான். ஈ. வெ. ராமசாமி நாயக்கரையும், B.A..B.L வக்கீல் வேலையைவிட்டு ஸ்ரீனிவாசய்யங்கார் கூடவே கவி பாடிக்கொண்டு திரிந்த ஸ்ரீமான். சர்க்கரை செட்டியாரையும் இன்றைய தினம் பிராமணர்கள் என்ன சொல்லுகிறார்கள்? நாளைக்கு உங்கள் கதியும் இப்படித்தானாகும். இவர்களாவது பிராமணர்கள் தயவில்லாவிட்டாலும் பிழைப்பார்கள் உங்கள் கதி என்ன ஆகும்? கான்பூரில் கூடிய மகா நாட்டிற்கு வயது 40. அமராவதியில் கூடிய மகா நாட்டிற்கு இப்போது வயது 2. இம்மகாநாட்டின் நடவடிக்கைகளைக் கவனித்தால், முன்னது வயதில் முதிர்ந்த இரணியனைப் போன்றது. பின்னது வயதில்சிறிய பிரகலாதனைப் போன்றது. நீங்கள், இரணியனை விரும்புகிறீர்களா? பிரகலாதனை விரும்புகிறீர்களா? என்பது அடுத்த தேர்தலில் தெரிந்துவிடும்.

வந்தே மாதரம்.

## ஸௌராஷ்ட்ர பிராமஹ்மண ஆறாவது மஹா நாடு

இம்மாதம் 24, 25-ந் தேதி ஞாயிறு, திங்களில் மதுரை ஸௌராஷ்டிர உயர்தரக் கலாசாலை புதுக்கட்டிட மைதானத்தில் அமைக்கப்பட்டிருக்கிற சிங்காரக்கொட்டகையில், திருச்சி உறையூர் பிரம்மஸ்ரீ ஸ்ரீமான். எ. கே. நன்னய்யர் பி. எ. பி. எல். அவர்கள் தலைமையில், மேற்கூறிய மகாநாடு நடைபெறும் என காரியதரிசி எழுதுகிறார்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துள்ள பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு.

குரோதன-ஹு தை-மீ ௪-உ

## வகுப்பு வாரிப் பிரதிநிதித்வம்

### தேசபக்தர்களின் யோக்கியதை.

வகுப்பு வாரிப்பிரதிநிதித்வம் என்கிற பதத்தை நாம் பொது ஜனங்களின் ஞாபகத்திற்குக் கொண்டு வந்தவுடனே அதனால் பிரதிகூலம் அடையக்கூடிய ஜனங்கள் தங்களால்கூடிய தடைகளையெல்லாம் செய்ய, மறுபடியும் ஆரம்பித்து விட்டார்கள். வகுப்பு வாரிப் பிரதிநிதித்வம் என்கிற உரிமையைப் பற்றி நமது நாட்டில் வெளிப்படையாக,நாம் அறிய சுமார் 20 வருடகாலங்களுக்கு மேலாகப் பிரஸ்தாபிக்கப்பட்டு வந்திருந்தாலும், சுமார் 10 வருடங்களுக்கு முன்பாகவே ராஜீயஸ்தாபனங்களில்,அது பிரவேசித்து, முஸ்லீம் சமூகத்தாருக்கு நமது தேசிய காங்கிரசின் மூலமாகவே,அதாவது,“தேசம்தான் பிரதானம்; வகுப்புகள் அதற்குப் பிற்பட்டது”; என்கிற தத்துவத்தையே கொள்கையாக உடைய காங்கிரசின் மூலமாகவே அதை ஒப்புக்கொண்டு சர்க்கார் மூலமாய் அதை அமுலுக்குக் கொண்டுவரும்படி ஏற்பாடு செய்யப்பட்டு,இப்பொழுது பழக்கத்திற்கு வந்துவிட்டது. அத்தோடு மாத்திரமல்லாமல், காங்கிரஸ் ஸ்தாபனங்களிலேயும், அதிலுள்ள ஸ்தானங்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் அளிக்கப்பட்டும் வந்திருக்கிறது. அதாவது, காங்கிரஸ் என்பதை ராஜீய ஸ்தாபன நிர்வாகமாக வைத்துக்கொண்டால், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி என்பது பார்லிமெண்டு போன்றதோர் ஆக்ஷி சபைக்குச் சமானமாகும். அவ்வித ஆட்சி சபைக்கு இந்தியாவின் சகல பிரஜைகளின் சார்பாக 350 மெம்பர்கள் ஒட்டு மொத்தம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அவற்றில் நமது தமிழ் நாட்டிற்கு மாத்திரம் 25 ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த இருபத்தைந்துக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் அளிக்கப்பட்டிருக்கிறது. அதாவது,தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி விதிகளின் 8-வது பிரிவில், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்குத் தேர்தல் என்கிற தலைப்பின்கீழ், “நான்கு முஸ்லீம்கள்,ஒருகிருஸ்தவர்,தீண்டாதார் என்று சொல்லப்படும் ஒருவர்” ஆகிய இவர்களையும், இவர்களைத் தவிர மொத்தத்தில் அதிக வாக்குப பெற்ற 19 அங்கத்தினர்களையும், தேர்தல் செய்ய வேண்டியது, என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்குப் பெயரென்ன? இது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமா? அல்லவா?

அன்றியும் 1917-ம் வருடத்தில் பிராமணரல்லாதார் ராஜீய உரிமைகள் பெருவதற்கும், வகுப்புவாரிபிரதிநிதித்துவம் அடைவதற்கும், டாக்டர் டி. எம். நாயர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பிராமணரல்லாதார் இயக்கம் நாமெல்லோரு மறிந்ததே. அவ்வியக்கத்தின் கொள்கைகளைப் பற்றி, அவ்வியக்கத்தில் சேராதிருந்த சில பிராமணரல்லாதார்களும் ஒப்புக்கொண்டு தானிருந்தார்கள். ஆனால் அதனுடைய திட்டங்களிலும், அவற்றை அடையும் வழிகளிலும் மாத்திரம் அபிப்பிராய பேதமேற்பட்டு, அதற்காக அதில் சேராமல், அதே கொள்கைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு, சென்னை மாகாணச் சங்கமென்கிற பெயரால் பிராமணரல்லாதார் இயக்கமென்று ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இவ்வியக்கம் பிராமணரல்லாதார் இயக்கமென்று சொல்லப்பட்டாலும், உண்மையில் பிராமணர்களுடைய பொருளும், ஆதரிப்பும், நடத்தும் அதிகாரமும், ஆகிய இவைகளே அவைகளில் குடிகொண்டிருந்தன. அப்படியிருந்தபோதிலும், ராஜீய உரிமைகளுக்காகக் காங்கிரசைப் பின்பற்றுவதும், பிராமணரல்லாதார் வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் அடைவதுமே அதன் கொள்கையாயிருந்ததென்பதில் இப்போது யாருக்கும் அபிப்பிராய பேதமில்லை. அதற்காதாரமாக, 1919-ம் வருடம் அக்டோபர் மாதம் 11, 12 தேதிகளில், ஈரோட்டில் ஸ்ரீமான். லாட். கோவிந்ததாஸ் அக்ராசனத்தின்கீழ் நடந்த சென்னை மாகாணச் சங்க கான்பிரன்ஸ் என்னும் மகாநாட்டில், உபசாரணை அக்ராசனராயிருந்த ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் வரவேற்புப் பிரசங்கத்தில் 6-வது பக்கம் “சென்னை மாகாணச் சங்கத்தார் வேலை” என்னும் தலைப்பின்கீழ் 2-வது கலத்தில் ‘‘தொழிலாளர் 100-க்கு 99—பேர் பிராமணரல்லாதாரேயாவார். இவர்களுக்கு நலன் செய்துவருவோர், நமது இயக்கத்தில் சேர்ந்தவரா? மற்றப் போலி இயக்கத்தில் சேர்ந்தவரா? தொழிலாளர் இயக்கத்துக்கும், முன்னேற்றத்துக்குமே காரணமாயுள்ள சென்னை மாகாணச் சங்கத்தின் அவசியத்தைப் பற்றிக் கூறவும்வேண்டுமா? காங்கிரஸ் கொள்கையைத் தழுவுவதும், வகுப்பு வாரிப் பிரதிநிதித்வம் பெற முயல்வதும், இந்தியாவில் பிறந்த அனைவரையும் இந்தியரெனக்கொண்டு, அவரோடு சகோதரத்துவம் பூண்டு தேச சேவைசெய்வதுமே நமது சங்கத்தின் பெரு நோக்கமாதலால், அந்நோக்கத்தை நிறைவேற்ற நமக்கெனத் தனியாகப் பத்திரிக்கைகளும்; பிரசாரகர்களும் வேண்டும்’’,என்றுபேசியிருக்கிறார். அதன்படியே ஷை மகாநாட்டிலும் வகுப்புவாரிப்பிரதிநிதித்வத்தைப் பற்றி, ஸ்ரீமான்கள். திரு. வி. கலியாணசுந்தர முதலியார், கேசவ பிள்ளை முதலியோர்களால் விஷயாலோசனைக் கமிட்டியில் தயாரிக்கப்பட்ட ஓர் தீர்மானத்தை, டாக்டர். வரதராஜுலு நாயுடுவால் மகாநாட்டில் பிரேரேபிக்கப் பட்டதில், ஸ்ரீமான். தஞ்சை இராமச்சந்திரம் செட்டியாரவர்களால் ஆட்சேபிக்கப்பட, அதற்கு ஸ்ரீமான். நாயுடுவே, வகுப்புவாரி பிரதிநிதித்வக் கொள்கையை ஒப்புக்கொள்ளாதவர்களுக்கு, இம்மகாநாட்டில் இடமில்லையென்று சொன்னதின் பேரில் ஏக மனதாய் நிறைவேறியிருக்கிறது.

அல்லாமலும்,காக்கிநாடா காங்கிரசிலும்,ஸ்ரீமான் தாஸரும்,கல்கத்தா மகமதியர்களும் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையே முக்கியமாகக் குறித்து ஸ்ரீமான். ராஜகோபாலாச்சாரியாரவர்களால் பிரேரேபிக்கப்பட்டு இருக்கிறது. சென்னை சட்டசபையிலும், இந்தியா சட்டசபையிலும் மற்றும் பல மாகாண சட்டசபைகளிலேயும் வகுப்பு வாரிப் பிரதிநிதித்வத்தின் பேரால் இன்றையத்தினமும், இந்திய அங்கத்தினர்கள் உட்கார்ந்து கொண்டு தானிருக்கிறார்கள். ஸ்தலஸ்தாபனங்களிலும்,மற்றும் பல ராஜீயஸ்தாபனங்களிலும் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்தின் பேரால், தாழ்ந்த வகுப்பார்கள், சர்க்காரரால் நியமனம் பெற்று உட்கார்ந்துகொண்டுதான் வருகிறார்கள். இன்றையத்தினமும் காஞ்சீபுரம் மகாநாட்டில் வகுப்புவாரிப்பிரதிநிதித்வம் கூடாதென்று வாதாடின, தீண்டாத வகுப்பைச்சேர்ந்தவரென்று சொல்லும் ஸ்ரீமான். ஜெயவேலுவும், மகமதியர் வகுப்பைச் சேர்ந்தவர்களான, ஜனாப்கள். ஷாபிமுகமது, அமீத்கான் இவர்களும், வகுப்புவாரிப்பிரதிநிதித்துவகொள்கையின் மூலமாய் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் ஸ்தானம் வகித்துக்கொண்டு தானிருக்கிறார்கள். திருச்சியில் இரண்டு வருடங்களுக்கு முன் கூடின மாகாணக்காங்கிரஸ் கமிட்டியில், ஸ்ரீமான். ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அக்ராசனராயிருக்கும்போது, ஜனாப்கள். ஷாபிமகம்மது, சென்னை அப்துல்ஹமீத்கான் முதலியவர்கள், தங்களுக்கு நான்கு ஸ்தானங்கள் போதாதென்றும், ஆறு ஸ்தானங்கள் அளிக்கப்பட வேண்டுமென்றும் விண்ணப்பம் எழுதி மற்றும் பல மகமதியர்களிடமும் கையெழுத்து வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஸ்ரீமான். குழந்தையும் தங்கள் வகுப்பாருக்குள்ள, வகுப்புவாரிப்பிரதிநிதித்வத்தின் பலனை அநுபவித்திருக்கிறார். அவருடைய பெயர் இன்றையத்தினமும் வகுப்புவாரிப்பிரதிநிதித்வ வோட்டர்லிஸ்டில் இருந்துதான் வருகிறது. இவ்வளவு பலம் பெற்று அமுலில் இருக்கும் ஒரு அபிப்ராயத்தை— பொது ஜனங்களின் விருப்பத்தை— தங்களுடைய பணப்பெருக்கத்தாலும், மித்திர பேதத்தாலும் அழுத்திவிடலாம் என்று நினைப்பது எவ்வளவு யோக்கியப்பொருப்பற்றகாரியமென்பதைப் பொது ஜனங்களே யோசிக்க வேண்டியது. அல்லாமலும் ஸ்ரீமான். முதலியாரையும்,ஜனாப்கள்.ஷாபிமகம்மது, அமீத்கானையும், ஸ்ரீமான்கள்.

குழந்தை, ஐயவேறு முதலியவர்களையும், பணங்காசு கொடுத்தோ, வேறு வழியில் அவர்களை ஏமாற்றியோ, தாங்கள் சுவாதீனம் செய்துகொண்டதினால் இவர்களால் என்ன காரியத்தைச் சாதித்துக் கொள்ள முடியும்? கூட்டங்களிலெல்லாம் ஸ்ரீமான். சீனிவாசய்யங்காரைத் தலைமை வகிக்கச் செய்யலாம்; ஸ்ரீமான். சீனிவாசய்யங்கார்தான் தமிழ் நாட்டுத் தலைவர்— தலைவரெனச் சத்தம்போடச் செய்விக்கலாம் ஆனால் தேசத்தார் இவர்களைப் பின்பற்றச் செய்யக்கூடுமா? இவர்கள் வார்த்தையை தேசத்தார் நம்பி விடுவார்களா? நேற்றும் முன்னும் இவர்கள் பேசியதையும், இவர்களின் நடத்தையையும் பொது ஜனங்கள் ஆராயமாட்டார்களா? எவ்வளவு நாளைக்குப் பொதுஜனங்களை ஏமாற்றமுடியும்? தண்ணீரில் விழுந்தவனைப் பிடிக்கப்போய் தானும் ஆழ்ந்துவிட்ட கதைபோல், ஸ்ரீமான். முதலியார், ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்காருக்கும்; சி. இராஜகோபாலாச்சாரியாருக்கும், உதவி செய்யப்போய், நாணய உலகத்திலிருந்து விலகி விட்டார். பொது ஜனங்கள் தன்னை எப்படி மதிக்கின்றார்களென்னும் கவலையே இல்லாமல், அதிக மதுபானம் செய்தவர்கள் தங்களை உலகத்தார் எப்படி நினைக்கின்றார்களென்பதைப் பற்றிக் கவலையில்லாமல்—இடுப்புத் துணி நழுவுவதுகூடத் தெரியாமல் எப்படித் திரிவார்களோ, அதுபோலவே, நமது முதலியார் தன்னையே சுவாதீனமிழந்து, ஒரு வருடகாலத்துக்கு, வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்துக்கு விரோதமாய்ப் பிரசாரம் செய்யப் போகிறேன்; என்று வீரகண்டாமணி ஆட்டுகிறார். பக்கத்திலிருக்கும் அவருடைய பிராமண நண்பர்கள், சபாஷ், சபாஷ் என்று கைதட்டுகிறார்கள். இரண்டு பிராமணர்கள் வாயினால், சபாஷ் என்று சொல்லப்படுவதைக் கேட்டுக் கொண்டு கூத்தாடுகின்றாரேயொழிய, கோடிக்கணக்கான மக்கள் இவரை என்ன சொல்லுகின்றார்களென்பதைக் கவனிக்கக்கூட நேரமில்லாமல் மயங்கியிருக்கிறார். பிராமணரல்லாத தொழிலாளர் அபிமானத்தால் ஏற்பட்ட தன்னுடைய பத்திரிக்கையாகிய நவசக்தியை அதன் உண்மைப் பெயருக்கேற்க, அதற்கு ஒன்பதுவித சக்தியைக் கற்பித்துக்கொண்டு போகிறார்.

அதாவது:—

(1) வகுப்புவாரிப் பிரதிநிதித்வம், தான், சென்னை மாகாணச் சங்கத்திலிருந்த போது வேண்டும் என்றார்.

(2) பிறகு காஞ்சி அக்ராசனப் பிரசங்கத்தில் வகுப்புவாரிப் பிரதி நிதித்வம் காங்கிரஸில் தான் முட்டிக்கொள்ளவேண்டுமென்கிறார்.

(3) அக்ராசனப் பீடத்தில், வகுப்புவாரிப்பிரதிநிதித்வதீர்மானத்தை மகாநாட்டில் அநுமதிப்பது ஒழுங்குக்கு விரோதமானது என்கிறார்.

(4) "நவசக்தி" பத்திரிக்கையில், சுயராஜ்யக்கக்ஷியை ஏற்றுக்கொள்ளாதவர் வகுப்புவாரிப் பிரதி நிதித்வம் வேண்டுமென்று கேட்பதற்குப் பொருளேயில்லை என்கிறார்.

(5) வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்தை ஆதரித்து, தான் எங்கும் பேசவேயில்லை என்கிறார்.

(6) பிறகு, வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்தால் நன்மையுமிருக்கிறது; தீமையுமிருக்கிறது, என்கிறார்.

(7) தற்கால நிலைக்கு எனக்கேட்கப்பட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்தை என்றுங் கேட்டுக் கொண்டிருத்தல் நியாயமா? என்கிறார்.

(8) பிறகு ஜஸ்டிஸ் கட்சியை ஒழிப்பதற்காகக் கேட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்தை உண்மையென்று நினைத்துக் கொள்ளலாமா? என்கிறார்.

(9) பின்பு வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்திற்கு விரோதமாய் தமிழ்நாடெங்கும் ஒரு வருடத்திற்குப் பிரசாரம் செய்யப் போகிறேன் என்கிறார்; (இது யாரை கெடுப்பதற்காக சொன்னேன் என்று நாளைக்குச் சொல்லுவாரோ தெரியவில்லை) ஆகிய ஒன்பது சக்திகளும் நமது முதலியாருக்கு எப்படிப் படிப்படியாய் உண்டாகி வந்திருக்கின்றதென்பதை நவசக்தி அன்பர்கள் கவனிக்கவேண்டும். இன்னும் எத்தனை சக்திகள் தொக்கியிருக்கின்றதோ ஸ்ரீமான். முதலியாருக்கும் கூடத்தெரியாதென்றே நினைக்கிறோம்.

நமது ஸ்ரீமான். முதலியார் தனது வாதத்துக்குச் சக்தியில்லாத சமயங்களில் காந்தியடிகளின் பெயரை இழுத்து விட்டுவிடுவது வழக்கம். ஏனென்றால் அந்தப் பெயரைச் சொல்லி தப்பித்துக்கொள்வதோடு, நவசக்தியின் வாசகர்கள் தன்னை காந்திவழியில் நிற்போரென்று எண்ணவேண்டுமென்கிற ஆசை. அதாவது, மகாத்மா காந்தி சுயராஜ்யக் கட்சியாருக்கு உதவிசெய்யும்படி சொல்லியிருக்கிறார்கள், என்பதை அடிக்கடி எழுதிக்கொண்டு, தான், அந்த சாக்கில் ஸ்ரீமான். சீனிவாசய்யங்காருக்கு உதவிசெய்ய வழிதேடுவது. இப்பொழுது, சுயராஜ்பக்கக்ஷிக்கு உதவிசெய்வதுடன் நிற்காமல் பிராமணரல்லாதாருக்குக் கெடுதி செய்பத்தகுந்த அளவுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்திற்கு, இடையூறாய்ப் புறப்படுவேனென்கிறார். மகாத்மா காந்தி சுயராஜ்யக்கக்ஷியாருக்கு, உதவிசெய்யும் திட்டத்தில், வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்திற்கு எதிர்ப்பிரசாரம் செய்வதையும் சேர்த்திருக்கிறாரா என்பதைப்பொது ஜனங்கள் கவனிக்க மாட்டார்களென்று ஸ்ரீமான். முதலியார் நினைத்து விட்டார் போலும். இவைகளெல்லாம் எப்படியிருந்த போதிலும் நமக்கு அதைப்பற்றி அதிகமான கவலையில்லை. ஆனாலும், ஒன்று மாத்திரம் நாம் சொல்லாமல் முடியவில்லை. தேசத்தின் பேராலும், சமூகத்தின் பேராலும், விடுதலையின் பேராலும்; சுயராஜ்யத்தின் பேராலும், உரிமையின்பேராலும், காந்தியடிகளின் பேராலும் நமது நாட்டில் கோடிக்கணக்கான பாமர ஜனங்களின் பிரதிநிதிகளாய் எப்பேர்ப்பட்ட யோக்கியர்கள் வேலைசெய்கிறார்கள் என்பதும், இவர்களிடத்தில் எவ்வளவு நாணயம் இருக்கிறது என்பதும், இவர்களுடைய "பொது சேவையின்" கருத்தென்ன என்பதும், ஆகிய இவைகளை ஜனங்கள் உணரவேண்டுமென்பது மாத்திரம் நம்முடைய பெரிய கவலையாயிருக்கிறது. 15 ரூபாய் சம்பளத்திற்காக முன் பின் அறியாத ஜெர்மனியரோடும், துருக்கியரோடும் சண்டை செய்வதற்காகப் போய் உயிர்விட்ட, இந்து—மகமதியர்—கிறிஸ்தவர்கள் உள்ள ஓர் நாட்டில், எவ்வளவோ பதவிகளுக்காகவும், எவ்வளவோ, சபாஷ் பட்டங்களுக்காகவும், எவ்வளவோ சம்பாதனைக்காகவும், மானம் விடுகிற ஜனங்கள் அபூர்வமாகப் போய்விடுமா? தேசத்திற்கு நல்ல காலம் இருக்குமேயானால், இவற்றை எல்லாம் ஜெயித்துக்கொண்டு போனால் தான் முடியுமே தவிர, இவற்றையெல்லாம் ராஜிசெய்து கொண்டு போவதாயிருந்தால் ஒரு நாளும் விடியாது; உரிமையும் கிடையாது.

## இரு பிராமணப் பத்திரிக்கைகளும் ஒருமகாநாடும்

வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்தைப் பற்றி "சோஷியல் ரிபார்மா" என்கிற பிராமணப்பத்திரிக்கை எழுதுகிறதாவது,—

வகுப்புவாரி இயக்கங்கள் நாளுக்கு நாள் வலுவடைகின்றனவென்பதை ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ளவேண்டும். காரணங்களும், தர்க்கங்களும் பேசுவதால் பயனில்லை. ஆகவே வகுப்புவாரி இயக்கங்களை நாம் வரவேற்கவேண்டும்...ஒவ்வொரு வகுப்பாரும், விடுதலை அடையவேண்டுமென்கிற உரிமையை நாம் ஒப்புக்கொள்ளுவோமேயெனில், இப்போதுள்ள வாதங்களும், தர்க்கங்களும் ஒழிந்துபோகும். ஆதலால் ஒருவகுப்பார், மற்றொரு வகுப்பாரின் இயக்கத்தை ஆதரிக்கவேண்டும். ஒற்றுமை ஏற்பட்டால், நம்முடைய பங்கு குறைந்து போய் விடுமென்று சில வகுப்பார் பயப்படுகிறார்கள். வகுப்புவாரி வேற்றுமைகளை ஒழித்து விடுவோமென்று சொல்வதில் நாம் ஆக்கிரமுடையவர்களாயிருக்கவேண்டாம். ஆதலால் ஒவ்வொரு வகுப்பாரும் முன்னேறுவதற்கு நாம் வேலைசெய்ப வகுப்புவாரி இயக்கங்களை ஆதரிப்போமாக.

"இந்து "பத்திரிகை எழுதுவதாவது:— வகுப்பு வாரிப்பிரதிநிதித்வம் ஜனங்களிடை சுயமதிப்பை உண்டுபண்ணியிருக்கின்றதென்பதையும், சமூதாய முன்னேற்றத்துக்குக்காரணமாயிருக்கின்றதென்பதையும், ராஜீய வாழ்வில் அலக்ஷியமாயிருந்த வகுப்பினருக்கு, ராஜீய அறிவு புகட்டுவதற்கான வசதிகளை அது உண்டு பண்ணியிருக்கிறதென்பதையும் மறுக்கமுடியாது என்று எழுதியிருக்கிறது.

சென்ற வாரம் மலையாளத்தில் கூடிய நம்பூதிரி பிராமணர்கள் மகா நாட்டில் நிறைவேறிய வகுப்பு வாரிப் பிரதிநிதித்வதீர்மானம்:—

கொச்சி, திருவாங்கூர், சென்னை சட்டசபைகள் சம்பந்தமாக நம்பூதிரிகளுக்கென தனிவாக்காளர் தொகுதி வகுப்புவாரி முறையில் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று இம்மகாநாடு வற்புறுத்துகிறது.

## மதுரைக் கோயில் பிரவேசம்.

---

### லேடிகோஷனும்—நாடார்களும்

மதுரை ஸ்ரீமான். குப்புசாமி ஐயர் என்கிற ஒரு பிராமணர், சென்னை கவர்னரின் மனைவியாரை, மதுரை மீனாக்ஷியம்மன்கோவிலுக்குள் அழைத்துப்போய் எல்லா இடங்களையும் கூட்டிக்காட்டினதாகவும், மிகுந்த மரியாதை செய்ததாகவும், அதற்கு நன்றியறிதலாய் அம்மையார், கோவிற் புத்தகத்தில், தம்மை மிக்கமரியாதையாக கோயிலுக்குள் அழைத்துச்சென்று பல இடங்களையும், நகைகளையும், பொக்கிஷங்களையும் காட்டின, ஸ்ரீமான். குப்புசாமி ஐயர் முதலியோருக்கு நன்றி செலுத்துகிறேன் என்று எழுதி, நற்சாக்ஷிப் பத்திரமும் கொடுத்துவிட்டுப் போனார்களாம். இதை நாம் ஆக்ஷேபிக்கவில்லை. ஆனாலும், அந்த அம்மையார், எவ்வளவு பெரிய அந்தஸ்து உடையவரானாலும், அந்நிய நாட்டார்—அந்நிய மதஸ்தர்—நமது மதத்தையும், சாமிகளையும் பார்த்துப் பரிகாசம் பண்ணுகிறவர்கள்—நமது மதத்துக்கு விரோதமாய்ப் பிரசாரம் செய்து நம்மவர்களை தங்கள் மதத்துக்குச் சேர்க்கிறதை ஆதரிப்பவர்கள்— நம்மை அஞ்ஞானிகளென்று சொல்லுகிறவர்கள்—நம்மை அடக்கியாண்டு நமது இரத்தத்தை உறிஞ்சி வாழும் ஜாதியைச் சேர்ந்தவர்கள்— என்பதை யாரும் மறுக்க முடியாது. அப்படியிருக்க, இப்படிப்பட்ட ஒருவரை நாம் நமதுகோவிலுக்குள், மரியாதை, விருதுகளுடன் கூட்டிக்கொண்டுபோய்க் காட்டி நற்சாக்ஷிப்பத்திரம் பெருகிறோம். அதே கோவிலுக்குள், நமது நாட்டார்—நமது மதஸ்தர்—நமது தெய்வத்திலும், மதத்திலும் நம்பிக்கைகொண்டு, கண்டு தெரிசிக்க ஆசைப்படுகிறவர்கள்—நமது நாட்டின் க்ஷேமத்தையும், மதத்தின் க்ஷேமத்தையும் சதாகாலமும் கோருகிறவர்கள்—நீ கோயிலுக்குள் பிரவேசிக்கக்கூடாது; நீ தாழ்ந்த ஜாதி என்று உதைத்துத்தள்ளினாலும், உங்கள் மதத்தை விட்டு வேறு மதத்திற்குப் போகேன்; உங்கள் சுவாமியைவிட்டு வேறு சுவாமியைக் கும்பிடேன்; என்று சொல்லிக்கொண்டு நம்மைவிட்டுப் போகாமல், நம்மையே வந்து கெஞ்சுகிறவர்கள்—நமது நாட்டின் க்ஷேமத்துக்கு உழைக்கிறவர்கள்; ஆகிய ஓர் பெரிய சமூகத்தாரான நமது நாடார் சகோதரர்களை மாத்திரம், அதே மீனாக்ஷியம்மனுக்கு, உன்னுடைய பணம் உதவும்; [illegible]னுடைய பால் உதவும்; உன் பேரால் உனக்கு கட்டளை அர்ச்சனை செய்து பணம் வாங்கிப்பிழைக்கலாம்; உன் வீட்டுக்குச் சமீபத்தில் மீனாக்ஷி வந்து நின்றுகொண்டு தீபாராதனை செய்யலாம்; உன் மண்டபத்திற்கு மீனாக்ஷி வந்து மண்டபக் கட்டளை செய்துகொள்ளலாம்; ஆனால் நீ கோயிலுக்குள்-கோவில் வெளிச் சுற்றுப்பிரகாரத்துக்குள்கூட நுழையக்கூடாது; நீ நுழைந்தால் எங்கள் சுவாமிக்குச் சக்தி குறைந்துபோகும்; கோயில் கெட்டுப்போகும்; இந்து மதம் போய்விடும்; வேதத்திற்கும், சாஸ்திரங்களுக்கும் விரோதமாய்விடும், என்று சொல்லுவோமானால் நாமும் மனிதர்கள்தானா? தெய்வம் ஒன்றிருக்குமானால், சத்தியம் ஒன்றிருக்குமானால், தர்மம் ஒன்றிருக்குமானால், நம்மை அவைகள் வாழவிடுமா? நமது நாடார்கள் கோவிலுக்குள் போவதனால், இந்து மதம் கெட்டுப்போகுமானால், அதுவும் ஒரு மதமாகுமா? அம்மாதிரியான மதம் நமக்கு எதற்கு? நமது சகோதரர்களான நாடார்கள் கோவிலுக்குள் போவதனால், நமது சுவாமியின் சக்தி குறைந்து போகுமென்று சொல்வோமேயானால், அம்மாதிரியான சுவாமியும் சுவாமியாகுமா? தன்னைக் கும்பிடாதவர்களும், பரிகசிக்கிறவர்களும் கோவிலுக்குள் வருவதனால் தன் சக்தி குறைந்து போகாது; தன் பக்தன் கோவிலுக்குள் வருவதினால் தன்னைக் கும்பிடுவதனால் தன் சக்தி குறைந்துபோகுமென்பதானால், அம்மாதிரியான சுவாமியைக் கும்பிடுவதில் என்ன பிரயோஜனம்? வேதங்களும், சாஸ்திரங்களும் நாடார் சகோதரர்கள் கோவிலுக்குள் போய் தங்கள் தெய்வங்களை வணங்குவதற்கு அநுமதிக்கவில்லையென்று சொன்னால், அவைகளை நாம் வேதமென்றும், சாஸ்திரமென்றும், சொல்லலாமா? வெள்ளைக்காரர்கள் எப்படி நம்மை பிரித்து வைத்து ஒருவருக்கொருவர் ஒற்றுமைப் படாமலிருக்கும்படி செய்துவைத்திருக்கும் தந்திரத்தால், 33 கோடி ஜனங்களுள்ள தேசத்தை, துப்பாக்கியையும், பீரங்கியையும் காட்டிக்கொண்டு அடக்கிஆண்டு, நமது செல்வத்தைக் கொள்ளையடித்து வருகிறார்களோ, அதுபோலவே பிராமணர்களும், நம்மைப் பல ஜாதிகளாகப் பிரித்து, ஒருவருக்கொருவர் உயர்ந்தவர், தாழ்ந்தவர் எனகிற வித்தியாசங்களைக் கற்பித்து, நம்மிலேயே ஒருவருக்கொருவர், உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று சண்டையிட்டுக்கொள்ளும்படியாகச்செய்வித்து, வேதம், சாஸ்த்திரம், புராணம், வழக்கம்என்கிற ஆயுதங்களால் நம்மை அடக்கி ஆண்டு, தாழ்மைப்படுத்தி, நமது இரத்தத்தை உறிஞ்சிப் பிழைத்துகொண்டு வருகிறார்கள். இதை அறியாமல் பிராமணரல்லாத சகோதரர்களும், தங்கள் புத்தியை, தங்கள் சுயநலத்திற்காகவோ அறியாமையினாலோ, பறிகொடுத்து விட்டு, வெள்ளைக்காரர்களின் அக்கிரமத்திற்குப் பிராமணர்கள் உதவி செய்வதுபோல், இம்மாதிரி பிராமணர்களின் அக்கிரமத்திற்குப் பிராமணரல்லாதாரில் சிலரே இரகசியத்தில் உதவி செய்து கொண்டு, தங்கள் மானத்தையும், வெட்கத்தையும் விட்டு பிராமணரல்லாதாருக்குத் துரோகம் செய்து வருகிறார்கள். இம்மாதிரி குணம், நமது சமூகத்திலிருந்து என்றைக்கு விலகுமோ, அன்றுதான் நமது நாடு சமத்வமடையும்; சுயமரியாதையுமடையும்.

---

## விஷமப் பிரசாரம்

---

### கதர் பக்தி

டாக்டர். நடேசன் சேலத்தில், கதர்ச்சாலையைத்திறந்து வைத்ததினால் பிராமணர்கள் கட்சியான சுயராஜ்யக்கட்சியாருக்குப் பெரிய நடுக்கம் ஏற்பட்டுப் போய் விட்டது. ஏனென்றால் கதரின் பேரைச்சொல்லிக்கொண்டு, தாங்கள் வோட்டர்களை ஏமாற்றுவதுபோல, பிரமணரல்லாத கட்சியினரும் அதைப்பின்பற்றி விடுவார்களோ வெனப்பயந்துகொண்டு, ஸ்ரீமான். சத்தியமூர்த்தியும், அவர் கோஷ்டியாரும் ஒவ்வொரு பிரசங்கத்திலும், “டாக்டர் நடேச முதலியார், அந்நிய ஆடையை அணிந்துகொண்டு கதர்ச்சாலையை திறந்துவைத்தார், இது பொது ஜனங்களை ஏமாற்றுவதற்காகச் செய்தவேலை”யென்று ஓயாமல் பேசியும் வருகிறார்கள்; எழுதியும் வருகிறார்கள்.

இப்படிச்செய்வது வெறும் விஷமப்பிரசாரமே தவிர இதில் யோக்கியதை கொஞ்சமுமில்லை. முதலாவது டாக்டர். நடேசமுதலியார் கதர்ச்சாலையைத் திறந்து வைக்கும்போதே, டாக்டர். வரதராஜலு நாயுடு, ஓர் சீட்டில் நீங்களேன் கதர் உடுத்தவில்லை, என்று எழுதி அவரைக் கேட்டார். அதற்குப்பதிலாய், டாக்டர் நடேசமுதலியார், பேசுகையில், தான் அணிந்திருப்பது கதர்தானென்றும், தங்களுடைய கொள்கைப்படி, பட்டும், உள்நாட்டு யந்திரத்தால் செய்யப்பட்ட நூலைக்கொண்டு உள்நாட்டு நெசவுகாரர்களால் நெய்யப்பட்ட துணியும் கதர் என்று பாவிப்பதாகவும், அந்தக்கொள்கைப்படியே, நான் இப்போது உள்நாட்டுப் பட்டாடைதான் அணிந்திருக்கிறேனென்றும் சொன்னார். மிதவாதிகளும், சுயராஜ்யக்கக்ஷியாரும் இதே கொள்கையை உடையவர்கள் தான். அதற்குதாரணமாகத்தான் சுயராஜ்யக்கட்சியார் காங்கிரசில் கூட கதர் ஒரு நிர்ப்பந்தமாயிருக்கக் கூடாதென்று ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். நேற்று பெல்காம் காங்கிரசிலும், கான்பூர்காங்கிரசிலும், ஸ்ரீமான்கள். ஏ. ரெங்கசாமி ஐயங்கார், சத்தியமூர்த்தி இவர்களும், அபயங்கர், ஜெயகர், மூஞ்சி இவர்களும் முறையே அந்நியநாட்டு நூலும் ஜரிகையும் கொண்ட வஸ்த்திரத்தைத்தான் அணிந்து கொண்டிருந்தார்கள்- தாங்கள் வோட்பிரசாரம் செய்யும்போதுமாத்திரம் தங்கள் கதருக்கு தங்கள் இஷ்டம்போல் வியாக்கியானம் செய்துகொள்ளலாம்; மற்றவர்கள்மாத்திரம், அவர்கள் உண்மையான கொள்கையைப் பின்பற்றுவதே பெரிய தப்பிதமாகக்கருதப்படுகிறது. இவ்வித சூழ்ச்சியால் பிராமணரல்லாதாரை இந்தப்பிராமணர்கள் எவ்வளவு காலத்திற்கு ஏமாற்றலாமென்றிருக்கிறார்களோ தெரியவில்லை.

---

# திருவாங்கூரில் மறுபடியும் சத்தியாக்கிரகம்

## தயார்—தயார்

தமிழ்நாடு தனதுகடமையைச் செய்யத் தயராயிருக்கிறது.

[டாக்டர் M. E. நாயுடு எழுதுகிறார்.)

திருவாங்கூர் சமஸ்தானத்தில் புண்ணிய க்ஷேத்திரங்களாக பல ஸ்தலங்கள் இருக்கின்றன. அவைகளில் வடக்கே வைக்கமும், மத்தியில் திருவனந்தபுரமும், தெற்கே சுசீந்திரமும் முக்கிய க்ஷேத்திரங்களாகும். வைக்கம் சத்தியாக்கிரகத்தின் பயனாய் வைக்கம் கோயிலைச்சுற்றியுள்ள ரோட்டுகள் ஜாதி உயர்வு தாழ்வு இன்றி சகல பிரஜைகளுக்கும் சமமாய் உபயோகிக்க விட்டாய்விட்டது. மற்றும் சிலரோட்டுகளை சமமாய் உபயோகிக்க அரசாங்கத்தார் வேண்டிய உதவிசெய்திருக்கிறார்கள், ஆதலால் திருவாங்கூரிலும், சுசீந்திரத்திலும், கோயிலைச்சுற்றியுள்ள பொது ரோட்டுகளில்,மகாராஜாவின் எல்லாப்பிரஜைகளுக்கும் நடக்க உரிமைவேண்டுமென்று முயற்சிகள் நடந்து வருகின்றன. இந்த தை மீ 5-ந் தேதி மாலை 4 மணிக்கு சுசீந்திரம் கோவிலைச்சுற்றி சகல இந்து ஜாதியாரையும் அழைத்துச்செல்லுவதாய் தீர்மானம் செய்திருக்கிறது. இதைப்பற்றிச் சர்க்காருக்கும், கோவில் அதிகாரிகளுக்கும், மார்கழிமீ 28-ந் தேதி முன்னறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. உரிமை தடுக்கப்பட்டால் சத்தியாக்கிரகம் நடத்தவும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

நமது குறிப்பு:—

இம்மாதிரி நாகர் கோவிலைச் சேர்ந்த கோட்டார் டாக்டர். எம். எம்பெருமாள் நாயுடு அவர்கள் நமக்கு எழுதியிருக்கிறார். மழைவிட்டும் தூற்றல் விடவில்லை என்று சொல்லுவதுபோல் வைக்கத்தில் சத்தியாக்கிரகம் செய்து தெருவில் நடக்கும் உரிமை பெற்றால், அது வைக்கத்திற்கு மாத்திரம்தான் செல்லும்; மற்ற இடங்களுக்குச் செல்லாது; என்கிற வியாக்கியானம் செய்து கொண்டு, அங்குள்ள வருணாசிரமிகள் மறுபடியும் உபத்திரவம் செய்வதாய்த் தெரிகிறது. வைக்கம் சத்தியாக்கிரகம் சம்பந்தமாய் திருவாங்கூர் அரசாங்கத்தார் எவ்விதமான உத்தரவும் போடவேயில்லை. வைக்கம் சத்தியாக்கிரகத்திற்குச் சர்க்காரார் செய்ததெல்லாம், தெருவில் ஜனங்களைத் தடுக்க நிறுத்தியிருந்த போலீஸ்காரர்களை எடுத்துவிட்டதுதான் அவர்கள் செய்த வேலை. இதற்காக ஓர் உத்திரவு போடும்படி சர்க்காரைக் கேட்டதற்கு அவர்கள் தாங்கள் வெகுவருஷங்களுக்கு, முன்பதாகவே, பொது ரஸ்தாக்களும், பொதுக் குளங்களும், ஜாதி மத வித்தியாசமில்லாமல் பொது ஜனங்கள் அநுபவிக்கத்தக்கது என்று உத்திரவு போட்டிருக்கிறோம்; என்று மறுமொழி சொல்லிவிட்டார்கள். ஆதலால், இப்பொழுது சர்க்காரார்பேரில் குற்றம் கூற இடமில்லை. பிராமணர்களொழிந்த, நாயர் முதலிய பிராமணரல்லாத உயர்ந்த ஜாதியாரென்று சொல்லப்படுகிறவர்களும், தங்கள், வகுப்பு மகா நாடுகளின் மூலமாக பொது ரஸ்தாக்களிலும், பொதுக் குளங்களிலும், சகல இந்துக்களும் தாராளமாய் நடமாடலாமென்கிற தீர்மானத்தையும் ஏக மனதாய்த் தீர்மானித்திருக்கிறார்கள். ஆதலால், இப்பொழுது சம உரிமைக்கு இடைஞ்சலாயிருப்பவர்கள் பிராமணர்களென்று தான் சொல்லவேண்டியிருக்கிறது. இம்மாதிரி ஒவ்வொரு காரியங்களுக்கும் சம உரிமைக்கு விரோதமாய் நின்றுகொண்டு மனிதர்களைக் கொடுமைப்படுத்தும் இந்த ஜாதியார்,எத்தனைநாளைக்கு இப்படியே வாழக்கூடுமென்று நினைக்கிறார்களோ தெரியவில்லை. தமிழ் நாட்டுச் சகோதரர்களே! சுசீந்திரத்தில் டாக்டர் எம்பெருமாள்நாயுடு அவர்கள் எழுதியிருப்பதுபோல் சத்தியாக்கிரகம் செய்ய வேண்டிய அவசியமேற்படுமேயானால், வைக்கம் சத்தியாக்கிரகத்துக்கு நமது கடமையைச்செய்தது போலவே, சுசீந்திரம் சத்தியாக்கிரகத்துக்கும் நாம் தயாராயிருக்கவேண்டும். தமிழ் நாட்டின் சார்பாக டாக்டர். எம்பெருமாள் நாயுடு அவர்களுக்கு, தமிழ்நாடு தனது கடமையைச் செய்யத்தவறாது என்று வாக்குக் கொடுக்கிறோம்.

ப—ர்.

---

# சத்தியமூர்த்தியா? அசத்தியமூர்த்தியா?.

ஸ்ரீமான். எஸ். ஏ. கணேசன் எழுதுகிறார்:—

நமது சத்தியமூர்த்தி அய்யரவர்கள் தன்னை எண்ணிப்பாராது பிறரைத் தூற்றுவதில் கைதேர்ந்தவரென்பது எவரும் அறிந்த விஷயம். இவர் சென்ற சில தினங்களுக்குமுன் சென்னையில் ஒரு கூட்டத்தில் தமது வழக்கமான வாயாடும் வன்மைக் கேற்ப, ஒரு பிரசங்கம் செய்தார். அப்பிரசங்கத்தில் ஸ்ரீரங்கம் கோவிலில் பரிசாரக ஊழியம் செய்துகொண்டிருந்த ஒரு ஸ்மார்த்தப் பிராம்மணன் நெற்றியில் விபூதியும், வயிற்றில்நாமமும் அணிந்திருந்ததாயும் ஏன் இவ்வாறு அணிந்திருக்கிறாயென்று கேட்க ஸ்மார்த்தர் தமது மதத்தை உத்தேசித்து, நெற்றியில் விபூதியும் வயிற்றுப்பிழைப்பை உத்தேசித்து வயிற்றுக்கு நாமமும் அணிந்திருப்பதாக சொன்னதுபோல்,சேலத்தில் ஒரு கதர் சாலை திறந்து வைக்கும்போது சென்னை ஸ்ரீமான். நடேச முதலியார் கதர் அணிந்து கொள்ளாது கதர் சாலை திறந்து வைத்தார் என்று குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார். சந்தோஷம். அய்யரவர்களுக்கு கதரில் இவ்வளவு அபிமானமிருப்பதுபற்றி நாம் சந்தோஷிக்கிறோம். ஆனால் அய்யரவர்களை நாமொன்று கேட்டுக்கொள்ளுகிறோம். நடேச முதலியாரைப் பற்றித் தாம் சொன்ன ஸ்மார்த்தப் பிராம்மணன் கதை தமக்குப் பொருத்தமில்லையா, என ஆலோசிக்கும்படி வேண்டுகிறோம். அய்யரவர்கள் கதரைப்பற்றி எங்கும் பேசுகிறார்; இவர் எப்போதும் தவராது கதரணிந்து கொள்வதாக ஒப்புக்கொள்வாரா; இவரைப்போல் நடேச முதலியார் வெளிவேஷத்துக்குக் கதர் போடவில்லையென்று வருந்துகிறாரா? இவர் பெல்காம் காங்கிரசுக்கு என்தஉடை அணிந்து வந்தார். சரிகை உருமால் வைத்திருக்கவில்லையா, இவர் இங்கிலாந்துக்குச் செல்லுங் காலத்து என்ன உடை அணிந்திருந்தார்? இன்னும் அய்யரவர்களுடைய உண்மையறிய வேண்டுமானால் இவ்வருஷத்திய இங்கிலீஷ்சுயராஜ்யா பத்திரிக்கையின் வருஷ அநுபந்தத்தை வாங்கிப் பாருங்கள். அதில் ஒரு படம் போடப்பட்டிருக்கிறது. இங்கிலாந்தில் இரண்டு துரைகளுடன் உட்கார்ந்து கொண்டு அய்யரவர்கள் ஒரு போட்டோ படம் பிடித்து வந்திருக்கிறார். அதில் ஸ்டுவர்ட்டு, டாக்டர் C.B க்ளார்க்,சத்தியமூர்த்தி ஆகிய மூவரும் இருக்கிறார்கள். அப்படத்தில்பார்த்தால், அய்யரவாள் கதரபிமானம் இங்கிலாந்தில் ஜொலிக்கிறது! அய்யரவர்கள் அப்படத்தில் கருப்பு சூட்டென்ன, கழுத்தில் அழகிய மடிப்பு காலரென்ன, டையென்ன ஹாட்டென்ன, போட்டுக்கொண்டு அய்யர் அலங்காரசகிதரய் ஆடம்பரத்துடன் பிரகாசிக்கிறார். போட்டோவில் சிரிக்கிறார்- இந்திய மக்களின் பிரதிநிதியாக சுயராஜ்ஜியம் கேட்க இங்கிலாந்து சென்ற அய்யரவர்கள் உண்மையில் என்ன உடையணிந்துபோயிருக்கவேண்டும். இந்தியாவின் விடுதலைக்கு ஆதாரமாக மகாத்மா காந்தியடிகள் கோலும் கதருடையல்லவோ அணிந்து போயிருக்கவேண்டும். இந்திய நாட்டில், கதர் உற்பத்தி அதிகரித்தால் ஆங்கில நாட்டினரின் வியாபாரம் எங்கு குறைந்து விடுமோ, என அஞ்சியிருக்கும் ஆங்கில நாட்டினர் இந்தியரின் பிரதிநிதியாகப்போன அய்யரவர்களின் சூட்டையும் ஹாட்டையும் கண்டு என்ன நினைத்திருப்பார். இந்த விஷயங்களைக் கவனித்து, ஸ்ரீரங்கத்து ஸ்மார்த்தப் பிராம்மணன் கதை நடேச முதலியாருக்குப்பொருத்தமா, சத்தியமூர்த்தி அய்யரவாளுக்குப் பொருத்தமா, என்பதை அய்யரவர்களையே கேட்கிறேன்- பேருக்குப் பிராமணீயமும் வயிற்றுப் பிழைப்புக்கு வக்கீலும், உத்தியோக வேஷமும் போடும் பிராமணர்களுக்கே ஸ்மார்த்தன் கதை அதிக பொருத்தமென்பதை ஐயருக்கு நினைவூட்டுகிறோம்.

# கதர் பரீக்ஷையில் தவறு.

## எல்லாம் நன்மைக்கே.

அந்தணர்பேட்டை கதர் விஷயமாய் கதர் போர்டு அதிகாரிகள் பரீக்ஷை செய்து பார்க்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஏனென்றால், அவ்விடம் தயார் செய்யப்பட்ட கதர் துணிகளில் சிலது நூல் சன்னமாயும், ஒரே மாதிரியாயும் இருந்ததோடு, அதிக கெட்டியாகவும் பார்வைக்கு மில் துணி போலவும் இருந்தது. இவ்வளவு நல்ல துணி சுத்தமான கதர் துணியாய், இவ்வளவு குறைந்த, அதாவது- சாதாரண கதர் துணி விலைக்கு கொஞ்சம் ஏறக்குறைய இருக்குமா என்கிற சந்தேகத்தின் பேரில் அதை அனுபோகசாலிகளான இரண்டொருவருக்கு பரீக்ஷைக்காக அனுப்பப்பட்டது. பரீக்ஷையில், பரீக்ஷகர்கள் அது கதராயிருக்க முடியாதென்று அபிப்ராயப்பட்டதால், உடனே அதற்கு கதர் போர்டாரால் அளிக்கப்பட்டிருந்த, நற்சாக்ஷி பத்திரத்தை வாப்பீசு அனுப்பும்படி எழுதிவிட்டு பத்திரிக்கைகளுக்கும், அந்தணர் பேட்டை கதர் சுத்தமான கதர் அல்ல என்பதாக அறிவிக்கப்பட்டுவிட்டது. பிறகு அந்தணர்பேட்டைக் கதராலயத்தார் தங்கள் ஆவலாதியைக் தெரிவித்துக்கொண்டதன்மேல், காரியதரிசி ஸ்ரீமான். ராமநாதன் நேரில் போய் பார்த்து அந்தணர் பேட்டைக் கதர் சுத்தமான கதர் என்றும், அதில் எவ்வித வித்தியாசமும் இல்லை என்றும் மனப்பூர்வமாய் அறிந்ததின் பேரில் பரீக்ஷையில் தவறிப்போனதிற்கும், அந்தணர் பேட்டை கதராலயத்திற்கு, கெட்ட பேர் ஏற்படவேண்டி வந்ததற்கும், தாம் மிகவும் வருந்தி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார் அதை முடிவில் பிரசுரித்திருக்கிறோம். கதர் போர்டார் பரீக்ஷையில் தவறிவிட்டதினால், முடிவாக அந்தணர்பேட்டை கதருக்கு உண்மையில் நன்மைஏற்பட்டதேதவிர, கெடுதி ஒன்றும் ஏற்படவில்லை. எப்படி என்றால் தமிழ் நாடு கதர்போர்டார் தமிழ்நாட்டில்சுமார் முப்பது நாற்பது கதர் சாலைகளுக்குமேல் சுத்தமான கதர் என்பதாக நற்சாக்ஷிபத்திரம் கொடுத்திருந்த போதிலும் அவையெல்லாம் உத்தேசத்தின் பேரிலும், மனிதர்களுடைய யோக்கியதையின் பேரிலும், அக்கம் பக்கம் விசாரித்ததின் பேரிலும் ஆள்களைவிட்டு அறிந்து வரச்சொல்லுவதின் பேரிலும் தான் நம்பிகொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தணர் பேட்டைக்கும் முன் இப்படித்தான் கொடுக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது காரியதரிசி ஸ்ரீமான். ராமநாதன் அந்தணர் பேட்டைக்கு நேரில் போய் ஒவ்வொரு தரிகளையும் ஒவ்வொரு ராட்டைகளையும், வேலை செய்யும் போது நேரில்பார்த்தும், கணக்குகளை ஆதியோடந்தமாய் பரிசோதித்து பார்த்தும் பல வழிகளிலும் சந்தேகமற திருப்தியடைந்து மறுபடியும் புதிதாக நற்சாக்ஷிபத்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் கதர் போர்டாரால் நற்சாக்ஷிபத்திரம் பெற்ற சுமார் 30, 40 கதர்ச்சாலைகளில் ஒன்றாவது, அந்தணர் பேட்டை கதர்ச்சாலை போல் அவ்வளவு தூரம் பரீக்ஷை செய்து திருப்தி அடைந்து கொடுக்கப்பட்டிருக்காது என்றே நினைக்கிறோம். ஆதலால் அந்தணர் பேட்டை கதர் சாலையை கதர்போர்டார் சந்தேகப்பட்டு அதன் நற்சாக்ஷிபத்திரத்தை ஒருதடவை ரத்து செய்து, மறுபடியும் கொடுத்ததானது, ஷி கதர்சாலையானது தனது பரிசுத்தத்தைப்பற்றி நெருப்பில் குளித்து வெளியில் வந்ததுபோல் ஆகிவிட்டது. எதுவும் நன்மைக்காகத்தான் என்று பெரியவர்கள் சொல்லும்வாக்குஇது விஷயத்தில் சரியாய் பலித்திருக்கிறது.

---

### தமிழ் நாடு கதர் போர்டு காரியதரிசியின் அறிக்கை:——

### அந்தணர்ப்பேட்டை விநாயக கதர்சாலை

சென்ற மாதத்தில் இக்கதர்சாலையைப் பற்றி நான் பத்திரிகைகளில் எழுதியிருந்தது வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். இவ்விடத்தில் உற்பத்தியாகும் கதர்போலி என்று, ஒரு பரிசோதகர் கூறியதை நம்பி இக்கதர்சாலையின் அத்தாட்சிப் பத்திரத்தை ரத்து செய்தேன். ஆனால் இம்மாத ஆரம்பத்தில் அந்தணர்பேட்டைக்கு நான் நேரில் போய் அவ்விடத்திலுள்ள தரிகளையும். நூற்பவர் வீடுகளையும், மற்றும் கதர்சாலையின் கணக்கு இருப்பு முதலியவைகளையும் சரிவர பரிசோதித்துப்பார்த்ததில், அவ்விடத்தில் உற்பத்தி செய்யப்படுவது பரிசுத்தமான கதர்தானென்றும் இக்கதர் தமிழ்நாட்டிலுள்ள மற்றவிடங்களில் உற்பத்தியாவதைக்காட்டிலும் நயமாகவும், நெருக்கமாய் செய்யப்பட்டதாகவும் இருப்பதே இதன்மேல் சந்தேகம் உண்டாவதற்குக்காரணமாய் இருந்ததென்றும் புலப்பட்டது. அந்தணர்ப்பேட்டை கதர் தொண்டர்களுக்கு தவறிழைத்ததைப்பற்றிபெரிதும் வருந்துகிறேன். தேசசேவையில் ஈடுபடுகிறவர்கள்மேல் காரணமற்ற சந்தேகங்கள் சிலசமயம் உதிப்பது சகஜம். அச்சந்தேகங்கள் அன்னாரின் தேசபக்திக்குஒருசோதனையாகி முடிவில் அப்பக்தியின் மேன்மையை விளக்கியே தீரும். விநாயகர் கதர்சாலையின் நிர்வாகஸ்தர்கள் இச்சோதனையில் ஜெயம்பெற்று வெளி வந்தது பாராட்டத்தக்கது.

விநாயக கதர்சாலை என்பது ஓர் கூட்டுறவு சங்கம். அதில் சுமார் 300 பங்குதாரர்கள் சேர்ந்து கதர் தொண்டு புரிந்து வருகின்றனர். மற்ற உற்பத்திசாலைகளைப் போலல்லாமல் இவர்கள் தங்களால் சொந்த உபயோகத்திறக்கே வாங்கிக்கொள்ளுகிறார்கள். வியாபார முறையில் அல்லது சொந்த உபயோகத்திற்காக உற்பத்தி செய்யப்படுவதுதான் இவ்விடத்தியகதரின் உடை நயத்திற்கும், விலை வித்தியாசத்திற்கும் காரணம். தமிழர்கள் கதரில் நயமான உடையை விரும்பினால் அந்தணர்ப்பேட்டைக்கு எழுதி காலத்தை வீணேகழிக்காமல் தங்கள் தங்களூரையும் அந்தணர்ப்பேட்டையாக்க முயலுவார்களா?

---

# ஸ்ரீமான். C. S. இரத்தினசபாபதி முதலியார் அவர்களுக்கு ஒரு பகிரங்க கடிதம்.

ஐயா, தாங்கள் தென் இந்தியா ரெயில் வேகம்பெனிக்கு யோசனை சொல்லும் கமிட்டியில் ஒரு அங்கத்தினராயிருப்பதுபற்றி மிகவும் சந்தோஷமே. ஆனால், அதில் தாங்கள் இருந்துகொண்டு செய்கிற வேலைகள் ஒன்றும் புதிதாயாவது, முக்கியமானதாகவாவது தெரியவில்லை.

அதாவது, கக்கூசு ரிப்பேர் செய்வதும், வண்டியில் சிற்றுண்டி வழங்குவதும், வண்டியின் நேரங்களை மாற்றுவதுமான காரியங்கள் ஆகிய எதுவும் பொதுஜனங்களுக்கு விசேஷநன்மை எதுவும் செய்துவிடாது. தங்கள் காலத்தில் ஏதாவது ஒரு நிரந்தரமான நன்மை செய்தாயிருக்க வேண்டுமானால்—பெரும்பான்மையான ஜனங்களின் உணர்ச்சிகளைத் தாங்கள் மதித்தவர்களாயிருக்க வேண்டுமானால்—ஒரு காரியம் செய்தால் போதும். அதைச் செய்துவிட்டு தங்கள் வேலையை ராஜீநாமா செய்துவிட்டாலும் சரி; அல்லது அந்தப்படி செய்ய தாங்கள் பிரயத்தனப்பட்டு முடியாமல் போனால் தாங்கள் ராஜீனாமா கொடுத்துவிட்டு வந்துவிட்டாலும் சரி. அதாவது, தென் இந்தியா ரயில்வேகாரர்கள் ரயில்வே இந்து பிரயாணிகளுக்கு உணவு வசதிக்காக முக்கியமான ஸ்டேஷன்களில் கட்டிடம் கட்டி ஓட்டல் வகையறாவுக்கு பிராமணர்களுக்கு கொடுத்து இருக்கிறார்கள். அவைகளை வாங்கி ஓட்டல் வைத்திருக்கும் பிராமணர்கள், சரிபகுதி இடத்தை ஒதுக்கி பிராமணர்களுக்கு மாத்திரம் என்றுபோர்டு போட்டுவிட்டு, மற்ற பகுதியில் எச்சிலை போடவும், கைகழுவவும் இடம் செய்வதோடு அந்த இடம் பிராமணரல்லாதாருக்கு என்றும், சிலஇடங்களில் சூத்திரர்களுக்கு என்றும், போர்டுபோட்டு விடுகிறார்கள். இது நியாயமா? 100-க்கு $3\frac{1}{2}$ பேர்உள்ளபிராமணர்களுக்கு பாதி இடம், 100-க்கு $96\frac{1}{2}$ பேர் உள்ள பல வகுப்பாரடங்கிய பிராமணரல்லாதாருக்கு பாதி இடம், ஒன்றாய்ப் பிரிப்பது ஒழுங்கானதாகுமா? எதற்காக பொது ஸ்தலத்தில் ஒரு வகுப்பாருக்கு மாத்திரம், அதுவும் 100 ல் $3\frac{1}{2}$ பேருக்கு தனிஇடம் ஏற்படுத்தவேண்டும்? வெள்ளைக்காரர் தமக்கு மாத்திரம் தனிவண்டி ஏற்படுத்திக்கொள்வதற்கு நாம் எவ்வளவு ஆக்ஷேபணை செய்கிறோம். அல்லாமலும் அது நமக்கு எவ்வளவு அவமானமாயிருக்கிறது. அப்படி இருக்க, இது ஏன் தங்களுக்கு தோன்றுவதில்லை? பிராமணர்கள் தனியாய்ச்சாப்பிடுவதால் நமக்குக்கவலையில்லை. அந்தப்படி அவர்கள் சாப்பிடவேண்டும். என்று நினைப்பதும், அதற்காக பிராமணருக்கு மாத்திரம் என்று போர்டு போடுவதும் எதை உத்தேசித்து? நம்மை தாழ்ந்த ஜாதியார் என்று எண்ணியல்லவா? இது, நமது ஜாதி இழிவைக் குறிக்கும் ஒரு நிரந்தரமான அடையாளமும் ஆதாரமுமல்லவா? இவ்வித பிரிவினை

களும் போர்டுகளும் இருப்பது, சுயமரியாதை உள்ளஒருவன் இம்மாதிரியான போர்டுகளைப் பார்க்கிறபோது, அவனுடைய ரத்தம் துடிக்குமா? துடிக்காதா? மனம் பதறுமா? பதறாதா? இதற்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள்? ஆதலால் தயவு செய்து, அடுத்த ஆலோசனை சபைக்கூட்டத்தில் இதைப்பற்றி ஒரு பிரேரேபனை கொண்டுபோக வேணுமாய்க் கோருகிறேன். அதாவது:—

"தென்இந்திய ரயில்வே ஸ்டேஷன்களில் உள்ள ஒவ்வொருபோஜன சாலைகளிலும் பிராமணர்க்கு மட்டும் என்றும், பிராமணரல்லாதாருக்கு என்றும், இடங்களை பாகுபடுத்தி போர்டு போடுவது, பிராமணரல்லாதார் பிறவியிலேயே தாழ்ந்தவர்கள் என்பதைக்காட்டுவதற்கு ஏற்பட்ட அறிகுறிபோல் இருப்பதோடு, பிராமணரல்லாதார் சுயமரியாதைக்கு விரோதமாய் இருப்பதாலும், அதை தப்பார்க்கும் போதெல்லாம் பிராமணரல்லாதார் மனம் புண்படுவதாலும் இந்த பாகுபாட்டை ஒழித்து சமமாய் நடத்தும்படி ஏற்பாடு செய்ய வேண்டும்" சித்திரபுத்திரன்.

---

[இரண்டாம் பக்கத்தின் தொடர்ச்சி]

வை விழுங்க அய்யங்கார் சூழ்ச்சியை விரித்தகாலத்து நமது டாக்டர் ஏனோ அடங்கியிருந்தார்?

டாக்டரவர்கள் மீது நமக்குள்ள அன்பு மேலீட்டினால் இதற்குமேல் ஒன்றுமெழுத நமக்கு விளங்கவில்லை, தமிழகமே! டாக்டரின் ஆதரவைப்பெறும் பாக்கியம் உனக்கு மிகவிரைவில் உண்டாவதாக!

வைக்கம் வீரரே! தங்களைத் தமிழுலகம் கைகூப்பித் தொழுகின்றது. காஞ்சியில் ஐயங்கார் சூழ்ச்சி ஜெயம்பெற்றது உண்மையே, ஆனால் அதனால் கேடுயாருக்கு? சூழ்ச்சிக்காரருக்கே.

பிராமணரல்லாதார் கோட்டத்தை அடக்கிவிட்டோம், ஜஸ்டிஸ் கட்சியை வீழ்த்திவிட்டோம், என ஐயங்கார் கோஷ்டியார் மகிழ்ச்சியடையலாம். ஆனால் அம்மகிழ்ச்சி நீண்டகாலம் நிலைபெறாது. ஜஸ்டிஸ் கட்சி வீழவேயில்லை. அறன்வளர்க்க எழுந்தகட்சி——சமத்துவம்காக்கத்தோன்றிய கட்சி——திண்ணியரான தியாக-மாதவர் கண்டகட்சி, எங்ஙனம் சாயும்? சாய்ந்தது பார்ப்பனச் சூழ்ச்சியே!

வைக்கம் வீரரே! சென்றவாரத்தில் தியாகராஜ நிலையத்தைத்தாங்கள் சேலத்தில் திறந்து வைத்தபொழுது நிகழ்த்திய சொற்பெருக்கைத் தமிழுலகம் போற்றுகின்றது. தங்கள் பெயரையும் வாழ்த்துகின்றது. அஞ்சாநெஞ்சு படைத்த வீரரே! தமிழர்களைக் கைவிடாதீர். நியாய பலமும் தெய்வத்திருவருளும் தங்களைத்தாங்கி நிற்கின்றன. தமிழுலகமும் தங்களை ஆதரிக்கின்றது. வீரரே! தமிழர்களை மீட்கவிரைவில் ஒருவழி காண்பீராக! ஜஸ்டிஸ்கட்சியே ஏற்ற வழியென்பது நமது தாழ்மையான அபிப்பிராயம். அது தங்களுக்கு உடன்பாடன்றாயின் தங்களுக்குகந்த ஒரு புதுவழியைக்காண்க! எவ்வழியாயினும் தமிழர் முன்னேற வேண்டும். தமிழரின் அடிமைத்தனம் நீங்கவேண்டும். வைக்கம் வீரரே! வாழ்க! வாழ்க!

---

## ஈரோடு முனிசிபல் சேர்மென் மீது மற்றொரு வழக்கு

ஈரோடு முனிசிபல் சேர்மன்மீது ஈரோடு முனிசீப் கோர்டில் ஒரு தடை உத்தரவு பெற்ற விஷயம் நேயர்களுக்குத் தெரிந்திருக்கும். ஏறக்குறைய 'அதுபோலவே மறுபடியும் ஒரு வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. அதாவது சில குறிப்பிட்ட விஷயங்களுக்காகக் கூட்டப்பட்ட மீட்டிங்கில் சில கவுன்சிலர்கள் அன்றையதினம் வரமுடியாமல் போன சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்திக்கொண்டு, நிகழ்ச்சிக் குறிப்பில் (அஜண்டாவில்) இல்லாத பலவிவாதமுள்ள விஷயத்தைக் கொண்டுவந்து தன் இஷ்டப்படி முடிவு செய்துகொண்டார். ஆதலால் அத்தீர்மானங்கள் செல்லாதென்றும், அவைகளை அமுலுக்கு கொண்டுவராமலிருக்கும்படி தடை உத்தரவு கொடுக்கும்படியும் வழக்கு தொடரப்பட்டது. முனிசீப்பு தடை உத்தரவு கொடுப்பதற்குப்பதிலாய் சேர்மனிடமே ஷை தீர்மானங்களை அமுலுக்குக்கொண்டு வருவதில்லை, என்று எழுதி வாங்கிக்கொண்டார் பிறகு சேர்மேன் அவசரகாரியமாயிருந்தால், நிகழ்ச்சி குறிப்பில் இல்லாவிட்டாலும், கொண்டு வரலாமென்று சட்டமிருப்பதாய் சொல்லி இத்தீர்மானங்கள் வெகு அவசரமென்றும், தன்னுடைய கட்டுப்பாட்டைவிலக்கவேண்டுமென்றும்கேட்டுக்கொண்டார். முனிசீப்பும் நேரில் பார்த்து, விஷயம் அவசரமெனக் கருதி அமுலுக்கு கொண்டு வர உத்திரவு அளித்துவிட்டார். விவகாரத்தின் முடிவே இவ்விஷயம் அவசரமா இல்லையா என்பதைப்பொருத்திருப்பதாலும், முன்சீப்பு இப்பொழுதே அவசரம் என்று தனது அபிப்ராயத்தை தெரிவித்து விட்டதால் வழக்கு முழுதும் இந்த முன்சீப்பாலேயே விசாரிக்கப்பட்டால், இதே அபிப்ராயத்தை அனுசரித்துத்தான் முடிவு ஏற்படும் என்கிற கவலை வாதிகளுக்கு ஏற்பட்டு இருந்தாலும், வேறு கோர்ட்டுக்கு மாற்றுவதானால். முனிசீப்புக்கு மன வருத்த மேற்பட்டு விடுமோ என்கிற பயத்தாலும், சொந்தப் பொருப்பிலும்,பொது காரியத்திலும், மற்றும் பல விவகாரங்கள் இவரிடம் இருப்பதால் அதற்கு ஏதாவது கெடுதி வந்துவிடுமோ என்கிற பயத்தாலும், மயங்கிக்கொண்டிருக்கிறார்கள் எப்படி முடியுமோ தெரியவில்லை. ஒரு நிருபர்

---

## சேந்தமங்கலம் பார்க்கவ குலச் சங்கம்.

இந்நகர் தெய்வீக ஆச்ரமத்தில், இம் மாதம் 1-ந் தேதியன்று மாலை, இனி நடைபெறப்போகும் கும்பகோணம் பார்க்கவ குல மகா நாட்டிற்குத் தலைவரைத் தெரிந்தெடுக்க, இவ்வூர் பார்க்கவகுல சங்கத்தின் விசேஷ கூட்டம் கூடிற்று. பலகுலகனவான்கள் விஜயம் செய்திருந்தனர். கும்பகோணம் மகா நாட்டிற்குத் தலைவராக, ஸ்ரீமான்கள். தஞ்சை பன்னீர் செல்வம், குடந்தை, ராமபத்ர உடையார், அதங்குடி சாமிநாத உடையார், முதலியவர்களை சிபார்சு செய்வதாக ஓர் தீர்மானம் நிறைவேறிற்று. என சேந்தமங்கலம், ஸ்ரீமான். கி. வா. ஜெகந்நாதன் எழுதுகிறார்.

---

## அகில சாத்தாத ஸ்ரீ வைஷ்ணவ 4-வது மகா நாடு திருப்பூர்.

ஷை மகாநாடானது, கோயமுத்தூர் ஜில்லா திருப்பூர் நகரில், இம்மாதம் 23, 24-ந் தேதிகளாகிய, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில், அரக்கோணம் ஸ்ரீமான். டி. பி. மணவாளய்யாகாரு அக்ராசனத்தின் கீழ் நடைபெறும். இக்குலத்தின் சகல சகோதர, சகோதரிகள் விஜயம் செய்து மகா நாட்டைக் கௌரவிக்கக் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர். என ஷை மகாநாட்டுப் பொதுக் காரியதரிசிகள் எழுதுகின்றனர்.

---

## ஸ்ரீமான். நாயக்கர்.


இம் மாதம் 16-ந்தேதியன்று, ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர், மூத்தூர், வெள்ளக்கோயில், கோடந்தூர், கரூர், முதலிய இடங்களுக்குக் கதர்ப்பிரசாரவிஷயமாய்ப்போயிருக்கிறார்.

---

## கோவை நகர் ஸ்ரீமான். செங்கோட்டை ஐயாவின் தர்மம்.

ஸ்ரீமான். செங்கோட்டை ஐயா சென்னிமலையில் நிலப்பெருக்கும், செல்வாக்குமுடையவர், கோவை முனிசிபாலிட்டியில் ஒரு கவுன்சிலர், ஓர் பஞ்சு வியாபாரி. இவர் தர்மசீலரென்பதற்கு இவருடைய கருணையே சான்று. அதாவது, இது சமயம் கோயமுத்தூர் முதலிய இடங்களில் பஞ்சமதிகரித்து மக்களை வாட்டிவருகின்றதை யாவருமறிவார்கள். இத்துன்பத்தைப் போக்கவே, ஸ்ரீமான். ஐயா சுமார் 500 ஏழைகளுக்குத் தினமும் கஞ்சி வார்த்து வருகின்றனர். இது ஓர்புறமிருக்க, குடி நீருக்கு ஆதித்திராவிடர் முதலிய தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுடைய கஷ்டம் அதிகம். இவர்கள் ஜலத்துக்காக நாலுமைல் போகவேண்டியிருக்கிறது. இக்கஷ்டங்களைக்கண்டு. ஸ்ரீமான். ஐயா, நாலைந்து கிணறு தன் சொந்தச் செலவில் வெட்டிக் கட்டிக் கொடுத்திருக்கின்றார். இவர் கருணையும், தர்மமும் மிகவும் பாராட்டத்தக்கது. இவருக்குக் கடவுள் தீர்க்காயுளைக் கொடுத்தும், குறைவற்ற செல்வத்தை அருளியும் காப்பாராக என முதலியார்கவுண்டன் வலசை, சோமியம், ஸ்ரீமான். மு. நஞ்சப்ப முதலியார் எழுதுகிறார்.

---



## உண்மையான கதர். கெட்டியான கதர்.

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ்நாடு காங்கிரஸ் கதர்போர்டாரின் உதவியாலும், மேற்பார்வையாலும், அத்தாட்சிப் பத்திரத்துடன் நடைபெறுகின்றது. கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

**காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்**

ஸ்ரீகாந்தி கதராலயத்தார் கைநூலால், கைத்தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

வா. மூ. தங்கப்பெருமாள்,
காங்கிரஸ்கதர் போர்டு காரியதரிசி.

ந. ராமசாமி,
மானேஜர், ஸ்ரீகாந்தி கதராலயம்,
திருப்பூர்.

வந்தேமாதரம்.

## கரூர் சுயம் கத்தர் ஜவுளிகள்.

தமிழ் நாட்டு கத்தர் போர்டாரால் நற்சாக்ஷி பத்திரம் பெற்ற கீழ்கண்ட கத்தர் ஸ்டோரில் உண்மை ஸ்ரணயத்திலும் நெசவு அழுத்தத்திலும் நீடித்து உழைக்கக்கூடியதுமான பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், அங்கவஸ்திரம், வெள்ளை பீஸ்கள், ஷர்டிங், கோட்டிங், சால்வைதினுசுகள் கத்தர் போர்டின் விலைக்கே விற்கப்படும். தேவைக்கு அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்.

S. ராமசாமி அய்யர்,
ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர்ஸ் கரூர்.

**அத்தாட்சிப்பத்திரம்**

(தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி) ஸ்ரீமான் எஸ். ராமசாமி அய்யர் ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து, நியாயமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்.

(ஒப்பம்) வா. மூ. தங்கப்பெருமாள்,
காரியதரிசிகத்தர், இலாகா.

## நவ இந்தியா

தேசமுன்னேற்றத்துக்கென உழைக்கும் ஓர் வாரப்பத்திரிகை. ஆசிரியர். ஸ்ரீமான். டி. எஸ். தியாகராஜ ஞானியார்.
வருட சந்தா ரூ. **5.**
மானேஜர், நவ இந்தியா,
திருவாரூர், S. I Ry.

## ஓர் மஹானின் மகிமை.

"அருமையான மூலிகையும் ரகஸியமும்."

குஷ்டம், க்ஷயம், முதல் சகலவித வியாதிகளும், செய்வினைகளும் நீங்கியும், புத்திர பாக்கியம் உண்டாகியும் அபாரமான எக்காரியங்களும் கோரியபடி முடிந்தும், ஏராளமான நற்சாக்ஷிகளும் சங்கத்தில் தங்கமெடலும் பெற்றவை.

எதற்காக தேவையானாலும் பதிலுக்கு ஸ்டாம்பு வைத்து கோயமுத்தூர் ஜில்லா மேட்டுப்பாளையம் பாலச்சந்திரன் ஆபீஸ் தலைவர், ஸ்ரீமான். எஸ். ஏ. கே. பிள்ளையவர்களுக்குவிபரமாக எழுதிக் கொள்வீர்களானால் சகலவிபரமும் புஸ்தகமும் கிடைக்கும்.

## "தேசோபகாரி"

பர்மாவில் விதேகி முழக்கஞ் செய்துவரும் ஓர் தமிழ் வாரப்பதிப்பு.
வருஷ சந்தா ரூபாய் ஐந்து.
மானேஜர்:— "தேசோபகாரி" லிமிடெட்,
45-36வது வீதி. ரங்கூன்.

## "தேசபக்தன்"

ஓர் தேசியத்தமிழ் பத்திரிகை.
பிரதி திங்கள், புதன், வெள்ளிதோறும் வெளிவருவது. விளம்பரத்திற் கேற்றது.
வருடசந்தா ரூபாய் 13.
வெளிநாடுகளுக்கு ரூபாய் 16.
காரியஸ்தர்,
"தேசபக்தன்" கொழும்பு.

## "தெய்வீகன்."

பார்க்கவகுல முன்னேற்றத்தை நாடியுழைக்கும் ஓர் மாத சஞ்சிகை.
பார்க்கவர்கட்கு வருட சந்தா ரூ. **2-0-0**
ஏனையோர்கட்கு வருட சந்தா ரூ. **1-8-0**
காரியஸ்தர். "தெய்வீகன்"
பொன்மலை, திருச்சி.

வெள்ளியை கொடுத்து தங்கத்தைப் பெறுங்கள்.
வந்தாலும் போனாலும் சரி என்ற லாட்டரி இல்லை.
கைமேல் பலன் கிடைக்கும்
இது ஜம்பமில்லை.
பட்ட பகல் போல் வெட்ட வெளிச்சமானது
ஒரு ரூபாய் வெள்ளி நாணயமாகக் கொடுத்தால் 32

## ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்.

பெறலாம்.

அதனை உபயோகித்தவர்கள் அது "தங்கத்திற்குச் சமமான நிறையுள்ளதென்று", கூறியிருக்கின்றனர். மனத்திலும், தேகத்திலுமுள்ள கோளாறுகளைப் போக்கடித்துப் பலஹீனம் அஜீர்ணம் முதலிய வியாதிகளை சுஸ்தமாக கண்டிக்கின்றது.

விபரம் வேண்டுவோர் இன்றே காரியஜஸ்தருக்கு எழுதுங்கள்.

ஆதங்க நிக்ஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே மதராஸ்.

## டைமண்ட் பிரஸ், ஈரோடு

எங்கள் அச்சாபீசில் தமிழ், இங்கிலீஷ் பாஷைகளில் நேர்த்தியான கலர் வேலைகள் அவரவர் இஷ்டப்படி குறைந்த சார்ஜுக்கு குறித்த காலத்தில் அச்சடித்துக் கொடுக்கப்படும்.

## போட்டோ படங்கள்.

எங்கள் ஆபீசில் தற்கால நாகரீகத்திற்கேற்றவாறு உயர்தர கலர் போட்டோ படங்கள் பிடிக்கப்படும்.

K. N. பெரியசாமி நாயுடு,
புரோப்ரைட்டர்.

முக்கிய கவனிப்பு.

## 18 காரட்டு ரோல்டு கோல்டு பிளேட் கேஸ் ரிஸ்லெட் கெடியாரங்கள்.



குடி அரசு சந்தாதாரர்களுக்கு மாத்திரம் இக்குறைந்த விலையும், உயர்ந்த பவுண்டன் பேனாவும், புதிய 1926 ஷ்டைல் அழகிய காலண்டரும் ஆர்டருக்கு இனாமாகப் பார்சலுடன் அனுப்பப்படும். சீக்கிரம் முந்துங்கள். இது நன்றாய் உழைக்கக் கூடியது. சரியான காலம்காட்டக்கூடியது. இதுபோன்ற கெடியாரங்கள் இனிவாய்ப்பதரிது. குறைந்தவிலையுள்ளது! சீக்கிரம் முந்துங்கள்!

நெ. 1, 22 காரட்டு ரோள்ட்கோள்ட் பிளேட் 5-வருஷ காரண்டியுள்ள ரிஸ்லெட் கெடியாரம் 12—0—0
நெ. 2 பொன் கில்ட் ரிஸ்லெட் கெடியாரம் தோல்பட்டையுடன் விலை 7—0—0
நெ. 3 22 காரட்டு ரோள்ட் கோள்ட் 5-வருஷ காரண்டி 15 கெம்புகள் செதுக்கிய லீவர் பாக்கட் கெடியாரம் உயர்ந்த சங்கிலியுடன் விலை ரூ. 15—0—0
விலாசம்:— நயாகரா வாட்ச் கம்பெனி தபால்பெட்டி நெ. 130, மதராஸ்

ஈரோடு டைமண்ட் பிரஸில் அச்சிடப்பெற்று ஈ. வெ. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.